உ

கடவுள் துணை

இவை,

வித்வசிரோமணியாகிய

புகழேந்திப்புலவர்பாடிய

திரௌபதை குறம்*

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்,

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1886

உ

சிவமயம்.

திரௌபதைக்குறம்.

4175.

விருத்தம்.

திருந்திட்குழல்பாஞ்சாலி செல்வத்துரோபதையாமங்கை
பெருந்திருவாள்தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட
பொருந்தியதெய்வச்செம்பொற் யொன்மலைவாழுங்கங்கை
தருந்தியமுகமனைத்தும் தகமதுதுதிசெய்வீரே.

ஆதியேயரியேபோற்றி அச்சுதாபோற்றிபோற்றி
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவள்ளிபங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாய்குறத்தைப்பாட கந்தனேயருள்செய்வாயே.

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன்திரியனாலே வனவாசம்பன்னிரெண்டும்
தஞ்சமாய்கழிந்தபின்பு தானுமேவிலாடதேசம்
வஞ்சியும்மன்னர்கூட வந்துமேதோன்றினாரே.

கலிவிருத்தம்.

(பரமசிவம்.)

மஞ்சுலாவுபாஞ் சாலநன்மாதகர்
விஞ்சுதுரோபதை மேற்சுறுநற்குற
வஞ்சிமாலை வழுத்தவேதிங்களார்
செஞ்சடிலன் திருவடிவாழ்த்துவாம்.

(விநாயகர்.)

பொன்னுமாமணிப் பூங்கழற்பொற்பினு
டென்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொலப்
பன்னுதப் [illegible] ன் கொன்றைப [illegible] னிமதி
மின்னு [illegible] வேண்டு [illegible] வாம்.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

திங்களுரகரவணியுஞ் சடையிலக்கு பொன்முடியுஞ்
செயிர்தீர்கண்மா
தங்கவதனத்தயங்க நான்மறையுஞ் சயசயவென்
றேத்திப்போற்றப்
பொங்குமுடனின்றல்லோய் தமியனுக்கி னற்குமனம்
புளகம்பூப்பப்
பங்கமறவென்னுவி லிருந்துபொருணை மருதமருள்
பாலிப்பாயே.

(வேறு,)

திருந்தியபொழில்பாஞ்சாலி சீர்கதைதமிழிற்பாட
பெருந்திருவானையாதம் பெட்புடன்வணங்கியேத்தி
பொருந்தியநூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்கதை வளம்பெறப்பாடுவாமல்.

காப்பு.

வெண்செந்துறை-விநாயகர்துதி.

விக்கினவிநாயகரோவேலவரோமுன்னடவும்
சந்திவிநாயகரே சரீந்தவயிற்றோனே
அந்திபகலும்முமை அன்பாகயான்மறவேன்
முந்திமுந்திவந்தனுக்கு முன்னடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையிநற்கரும்பும்
இத்தனையும்பெற்றுமல்லோ இருந்தீர்மரத்தடியில்
(உம்மை)கண்டுபரமசிவன் கருத்தில்நினைவாகி
விக்கினரும்வேலவரும் இருவருமவாருமென்றூர்
அந்தவுரை கேட்டு அடிதொழுதீரிருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பார்வதியைக்கண்காட்டி
பிள்ளைகளைத்தான்பார்த்து பூரிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லாம் இருவருஞ்சுற்றிவந்தால்
முந்திவந்தாகின்றவர்க்குஇந்தக்கனி தருவேன்
என்றவுரைகேட்டு யெழுந்தாரேவேலவரும்
பச்சைமயிலேறிப் பாரெல்லாஞ்சுற்றப்போனார்
அப்போதுநேரெழுந்து ஆனைச்சுத்தி

ஈரேழுலகமெல்லாம் இவர்தானேதெய்வமென்று
சுற்றிவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமெல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கடலேழுலகமெல்லாம்
எல்லையெல்லாம்சுத்திவந்து ஏமாந்தார்வேலவரும்
கர்த்தருடகைதனிலே கனிபெற்றுவந்தவரே
கனிபெற்றுவந்தவரே காருமையாவிக்கினரே
துரோபதையாள்தன்குறத்தை சொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தை பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரரே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனார்புத்திரனே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவனே யானுக்கு

முருகர் துதி.

ஆறுமுகம்படைத்த அரனார்திருமகனே
சரவணப்பொய்கைதனில்வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறும்கர்த்தருடபுத்திரரே
பச்சைமயிலேறும்பார்வதியாள்புத்திரரே
புள்ளிமயிலேறும்வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வேலவரேமுன்னடவும்
அக்கினியில்வந்துதித்தஆரணங்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அபிஷேகபத்தினியாள்
பத்தினியாள்தன்குறத்தைபாருலகில்பாடுதற்கு
கர்த்தருடபுத்திரரேகடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல்காருமையா வேல்முருகா
பாட்டுதவராமல்பட்சமுடன்வந்தருளும்
வாக்குதவராமல்வர்ண்ணமுகம்பாரும்

சரஸ்வதியம்மன் ஸ்துதி.

வராகவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன்னுடைய
நாபிக்கமலந்தன்னில் வந்துதித்தநான்முகனார்
நான்முகனார்தன்னுடைய நாவிலிருப்பவளே
நாவிலிருப்பவளே நற்கருத்தையுண்டுபண்ணும்
மாயன்மருமகளே வந்[illegible]க்குமுன்னடவும்
தாயேசரஸ்வதியே ச[illegible]வும்

பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைகுறமுரைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுதவராமல் சொல்வார்த்தைதவறாமல்
எடுதவராமல் எழுத்தாணிசாயாமல்
நாவுதவராமல் நடத்துமம்மாயிக்கதையை
தப்பிதங்கள்வாராமல் சங்கரியேகாருமம்மா
குற்றங்கள்வாராமல் கொம்பனையேகாருமம்மா
கார்க்கோடனுக்கு கர்த்தருடதேவியரே
பாடவெனக்கருளும்பாரளந்தான்மருமகளே
சொல்லருள்புரியும் சுந்தரியேயெகனுக்கு
கடல்வண்ணன்மருமகளைதொழுதுப்பாடுகிறேன்

கதையின்வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் இந்திரபுரிபட்டணமாம்
இந்திரபுரிபட்டணத்தை யிருந்தரசையாளுகையில்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளுகையிலே
கோணமாதவத்துக்குந்தியம்மாள்தாயாரும
தோகைவடிவழகி துரோபதைதாயியும்
அருச்சுனனர்தேவிமார்கள் அனைவருமொன்றாக
எல்லவருமொன்றாக யிருந்தரசையாளுகையில்
அத்திப்புரமானும் அரவக்கொடியோனும்
நாலாயிரவர்நூற்றொருதம்பிகளும்
கருணைச்சகுனியுங் கர்க்கேயர்வுள்ளவரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளமற்றவரும்
பாட்டனர்வீஷ்மரும்பரிவதுரோணருமாய்
எல்லவருமாக எல்லையுலகாளுகையில்
அத்திப்புரமாளும் அரவக்கொடியோனும்
அபடலத்துவாசலிலே அனைவருக்குமேதுசொல்வான்
(என்) பக்க ளிபஞ்சவர்கள் பாருலகாளுகிறார்
ஜவனபுமாக்குசந்தி ஆளவேண்டும்நமையெல்லாம்
இப்படிக்குச்செய்யல்லோ எழுதினான் ஓலையொன்று
சிதுரனைப்போகவிட்டு ஜவனாபுத்தானழைத்து
மாயத்தால்சூதாடிமண்ணுருக பறித்து
மன்னர்சபைநடுவே மானத்தையழிக்க[illegible]
கெற்றவர்கள்[illegible] [illegible]

பண்ணாதகோலமெல்லாம் பண்ணியந்தபஞ்சவரை
காட்டாதகோலமெல்லாம் காட்டியந்தபஞ்சவரை
பனிரண்டுதன்வருஷம் பாரவனவாசஞ்செய்து
பதிமூன்றுதன்வருஷம் அக்கியாதவாசம்பண்ணி
உருவந்தெரியாமல் வொளித்துமிகத்தானிருந்து
பதினாலாந்தன்வருஷம் பிறந்தபிறகாக
பதினெட்டாம்நாளையிலே படைபொருதஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அமூர்த்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லாம் இறக்கும்படியடித்து
வண்ணமுடிசிந்திரங்கள் மாண்டபிறகாக
வந்துமேதீங்கள்எல்லாம் வாழும்அரசாண்டு
என்றுமவனுரைத்தான் எரிசாகங்கொண்டவனும்
இந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணக்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையும்
அப்படியேநல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாவனத்தாண்டி வந்தாரிருண்டவனம்
அந்தவனத்தனிலே ஆனமுகர்பஞ்சவர்கள்
பாஞ்சாலியுடன்பெண்ணி பஞ்சவர்கள்தானிருந்தார்
பண்ணையதுகலவைப் பாட்டைப்புளிகருணை
தும்மைபுளிகருணை தூதுவளைமுன்கீரை
கிள்ளிசமைத்துமவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கேயிருந்தார்சிலகாலம்
மற்றுஞ்சிலகாலம் சென்றபிறகாக
தருமரிஷிவாயாலே நால்வருந்தான்மாண்டார்கள்
தருமர்அவர்பார்த்து தாம்புலம்பும்வேளையிலே
நாராயணர்வந்து எழுப்பினார்நால்வரையும்
ஆயருடபுண்ணியத்தால் அங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்துமவர்வாசம்பண்ணார்
அங்கேயும்பட்ட அவதிகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமே பட்டார்வெகுபாடு
பத்தாம்வருஷத்திலே பாஞ்சாலிபேதுசொல்வாள்
ஐவரையுந்தெண்டனிட்டு ஆரணங்குகேட்கலுற்றாள்
ஐவர்களுங்கேளுங்கள் அடியேனொருவார்த்தை
அத்திபுரமுமல்லோ அரவக்கொடியோனும்

சிமையும்பூமியுந்தேசத்தில்செல்விளையும்
அரவக்கொடியோனும் அவனுடையசேனைகளும்
எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாரேனையா
போகவிடைதாருமென்று பொற்கொடியுந்தெண்டனிட்டாள்
உத்தரவுதாருமென்று வுத்தமியாள்கேழ்க்கலுமே
தக்கப்புகழுடைய தருமரவரோதுசொல்வார்
அனலில்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
ஐவருக்குந்தேவியரே ஆரணக்கேசீர்கேளும்
பங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
நாய:நிவாசலுக்குத் தனியாகப்போகலாமோ
போனவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துஎமக்குரைப்பார் யார்காணுமங்கையரே
சொல்லுந்துரோபதையே யென்றுமவர்கேட்க
அப்போதுதுரோபதையாளாரணங்குஏதுசொல்வார்
இவ்வேழமாகவேனுன் போவேனேமன்னர்களே
கொச்சைகுறத்திடைப்போல் போய்வாரேன்மன்னர்களே
மலைக்குறத்திப்போலாகநான் வடிவெடுத்துப்போனாலே
அத்திபுரந்தனிலெனக்கு அவகேடுவந்தாலே
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்காத்திடுவார்
வராகவதாரங்கொண்ட வைகுந்தன்காத்திடுவார்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
ஆனுலழகுமன்வர் ஐவர்களுந்தான்பார்த்து
ஆரணங்குதுரோபதைக்கு ஐவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுபடி வுத்தமியேசெய்யுமென்றார்
(உன்)சித்தத்துக்கேற்றபடி செய்யுமென்றார்பஞ்சவர்கள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அருச்சுனராஜாவை ஆரணங்குதானழைத்து
இருவருமாகவல்லோ இளந்தோப்பில்வந்தார்கள்
உருத்திராட்சமரத்தடியில் வுட்கார்ந்திருவருமாய்
தோராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராஜாவர் அவர்கையில்தான்கோதி
சிவிசிணுக்கறுத்துச் சிமிழ்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டையிட்டு

இப்படியாய்ப்பெண்டுகளை எக்கிறும்நாம்கண்ட இல்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணிபிடல்லவே
இராமனுடன்தேவி சீதைஎதிரல்லவே
அகலிகைமண்டோதரி யாருமெதிரல்லவே
இரம்பையூர்வசியும்நல்லதிலோர்த்தமையும்
தாளியமாலியரும் தருந்தகருணவதியும்
இந்தக்குறத்திபற்கு ஈதிசொல்லலாகாது
காமக்குறத்திபற்குக் கட்டுரைக்கலாகாது
இவளழகும்பாவனையும்எங்கிலுங்கண்டறியோம்
இருவழகும்ஒப்பனையும் தேசத்தில்கண்டறியோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோஎல்லவருமோடிவந்தோம்
மாலைக்குறத்திமலைக்குறத்திமுன்னேவந்தோம்
கானக்குறத்திமுன்னே வந்துமவரேதுசொல்வார்
ஆரோடிகட்டிவச்சி அன்னமேபூங்குறத்தி
எவளோடிகட்டிவச்சி யிந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டல்லவே உருகுதடியெங்கள்மனம்
உன்-வடிவழகைக்கண்டல்லவோ மயக்கித்தவிக்கிறோம்
எங்களுடமாளிகைக்கு வந்தாயேயானால்
கட்டநல்லபட்டுமுண்டு சூட்டப்பணிதியுண்டு
மோடவுடமையுண்டு சூட்டப்பணிதியுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்கேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழானசந்தமுண்டு
அன்னவுஞ்சல்மேலே ஆடலாமெப்போதும்
உன்னைப்பிரியாமல் வுகந்துவிளையாடிருப்போம்
ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
ஏன்காணும்கட்டிவச்சி யிளங்குறத்திநாயகமே
வாராயோஎங்களுட வர்ண்ணமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்க இளங்குறத்திகட்டிவச்சி
மலையாளப்பூங்குறத்திமன்னவருக்கேதுசொல்வாள்

குறம்,

ஏன்காணும்மன்னர்களே யிடக்குகளைச்சொன்னீர்

இன்னாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
மலசாதிக்குறத்தியைப்போல் எண்ணியேதானுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்கும் கைபார்க்கும்குறத்தி
கானகத்தில்வாழுகின்ற குறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளியற்கும் கைபார்க்குங்குறத்தி

இன்னாட்டில்வாழுகின்றகுறத்தியல்லநானும்
இந்திரர்க்கும்தேவியர்க்கும் குறியுரைக்குங்குறத்தி
என்னுயர்தெரியாமல் அனியாயம்சொன்னீர்
இன்னாட்டுக்குறத்தியர்போல் யிடைந்துநடப்பீரே
என்குறவரைவர்கண்டால் இப்பொழுதுதன்னில்
இத்தட்சணமுங்கள்மண்டை யுருளஅடித்திடுவார்
குறவருடக்கூட்டமெல்லாம் அடியோடேவந்து
கொற்றவனார்சீமைதனைச்சுட்டெரிக்கப்போரார்
குறச்சாதிஎன்சாதி யிழிவானசாதி
கொற்றவரேநானுமக்கு கட்டுமோதான்சொல்லும்
குமாரற்றமுன்களுக்கு குமட்டிமடியாதோ
கொம்பனையாள்மேலாசை தோன்றுதோநீர்சொல்லும்
கருணரிடவிதிதன்னில் அதர்மங்களுண்டாச்சோ
கட்டழகர்கூடியேயேன் கைபிடிக்கவந்தீர்
கருணரிதைத்தானறிந்தால் கஷ்டங்கள்சேரும்
காலோகரோகங்களுக் குடிப்பழுதும்வருமே
இச்சைபுடனித்தெருவில் பிச்சைக்குநான்வந்தேன்
அந்தனையுநீங்கள் எல்லாம் வெண்டாமுக்கலாமோ
சமுசாரியானவனைத் தேடியேவெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவருமென்றெண்ணிடவும்
ஒருவனிடதேவிதன்னை ஒருவனைத்தியழைத்தால்
உடனே அவன்தன்தலைக்குப் பழுதுவருமென்றார்
பிறருடையபெண்களைப் பேதப்படநினைத்தால்
பெருநரகமடைவாரென்று பெரியோர்கள்சொல்லுவார்
இப்படியாயுலகுதனில் அறிவழிந்தமாந்தர்
எத்தனையோகோடியுண்டு எனக்குத்தெரிந்தளவு
ஸ்ரீராமர்தன்னுடைய தேவியருளாலே
தென்னிலங்கைராவணனும் சுதனத்தின்மடிந்தானே
அகலிகைதன்னாலே ஆயிரங்கண்ணுடையாள்
அவளாசைதன்னாலே பூனைப்போல்நடந்து
உள்நுழையும்வேளையிலே கௌதமருங்கண்டு
ஒய்யாதமனங்கொதித்து மெய்ப்புடனேயவனும்
தேவேந்திரனென்றறிந்து சிறியர்தமுனியும்
சீக்கிரமாயவன்கேட்கவாக்குரைத்தாரவனும்
இந்திரன்தன்தேகமெல்லாம் யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபமளவிலையுலகறிய
கௌதமர்சாபத்தினுல் இந்திரனும்நொந்து
இலேசங்கொண்டு அவருடைய பாதத்தில்விழுந்தான்
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றுபணிந்து

சுவாமிஎனைக்காருமென்று மிகவணக்கியுரைத்தான்
என்றுமிவன்தானுரைக்க கௌதமருமிரங்கி
இந்திரனார்தேகமெல்லாம் விழியாகவென்றார்
அன்றுமுதலின்றளவு கௌதமனாருரையால்
ஆயிரங்கணிந்திரனா ரென்றுசொலுமுலகம்
தேவேந்திரன்போனபின்பு கௌதமனார்தாமும்
தேவியனைதானழைத்து மிகவுரைப்பாரவட்கு
ஒண்டிபெண்ணே அகலிகையே இந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசை கொண்டிருந்தாயென்றார்
அந்தவுரைகேட்டவள் பயந்துமிகத்தியங்கி
ஆண்டவனே நான்செய்த குற்றமதைக்கேளும்
சித்திரையபெலத்தனுக்கு நினைவுதடுமாறி
நீரென்றுமவனென்றும் நானறியேனென்றாள்
என்றுமிவள்தானுரைக்க கௌதமரும்வெகுண்டு
இவளையொருகற்பாறையாக வென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால் அகலிகையும்பார்த்து
இவருடையபாதமதில் மிகநோக்கிவீழ்ந்தாள்
ஆண்டவரேயென்குருவேஐயாவேசுவாமி
இட்டதொருபெருஞ்சாபம்எப்பொழுதுதீரும்
எந்தனுக்குவுரையுமென்று மிகநோக்கிப்பணிந்தாள்
என்றுமவள்தானுரைக்கமிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுலகமெல்லாம் ஆளுந்தெசரதனால்
ஸ்ரீராமர்தெசரதற்குப் புத்திரராய்ப்பிறந்து
செல்வமுள்ளபனிரண்டுவயதுடையநாளில்
இராசரிஷியானவரும் ஆகமனுவுரைத்து
தெசரதனார்தன்னருகில் தேடியவர்வந்து
ஸ்ரீராமலட்சுமணரை அனுப்பவென்றுகேட்க
தெசரதனுந்தான்மகிழ்ந்து ஸ்ரீராமர்தனையும்
சுந்தரமானலட்சுமணரை யிருவரையும்அனுப்ப
இராசரிஷிமனமகிழ்ந்தானமாகநடந்தார்
இராகவருங்லட்சுமணரும் கூடவேதான்தொடர்ந்தார்
இராசரிஷிதன்னுடனே மூவருமாய்வந்து
இராமருடன்லட்சுமணரும் வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்குமவேளையிலே தாடகையும்வந்தாள்
இன்னாறுஎனவுரைத்தார் ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரந்நேரம் இராமநக்குரிஷியும்

என்னுடைய கமலை கலைக்கவந்தபேடை
இவளுயிரைவாங்குமென்று உரைத்தார்தரிஷியும்
குருவுரைத்தவாக்யமதை கோபாலரதிக்கு
கொப்பனவேவில்லெடுத்து குணத்தொனிசெய்து
தாடகையைவிழவடித்து மாரீசன்றன்னை
தகைமையுடனுயர்வதைத்துத் தகைமையுடனடந்தார்
விஸ்வாமித்திரர்தன்னுடனே வேண்டியிருவர்களும்
விஸ்தாரமானதொரு வழிகடந்தார்மூவர்
மிதிலைப்பதிநோக்கியல்லோ வருகின்றவழியில்
மிதித்தாரே அகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனே அவள் மேதினியிலெழுந்து
பத்தியுடன்சுதிவந்து நமஸ்கரித்தாளவளும்
இராகவனுந்தானபார்த்து இவளாரென்றுரைக்க
இராசரிஷியானவரும் இராமனுக்குவுரைத்தார்.
அப்போது அகலிகையும அண்டமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்து கௌதமரைப்பணிந்தாள்
அகலிகையுங்கௌதமரும் கூடிமிகவாழ்ந்து
கோமளர்போலுஞ்சில பிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனில் எத்தனையோகோடி
எத்தனைப்பெண்டளைநுக்கவந்தீர் மன்னர்களேயோம்போம்
ஆனாலேகெட்டவர்கள் ஆருமில்லையுலகில்
அவசேபெண்ணாலே வருமென்றுசொல்வார்
இப்படிக்குறத்தாளுரைத்து விடைதுவளநகைத்தாள்
இளங்குறத்திதனைப்போலே விடைதுவளநகைத்தாள்

வேறு.

குறத்தியவள்போனபின்பு கொற்றவர்களெல்லாரும்
மாதுமயலாலே வாடிமனந்தளர்ந்து
தையல்மயலாலே தங்கள்முகம்வாடி
காமன்கணையாலே களைப்பட்டுப்போய்விழுந்தார்
நினைவுதமொறி நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து
படுத்தப்பரிக்கையிட்டார் பார்மன்னரெல்லவரும
குறத்தியவளாலே கொற்றவர்போய்படுத்தார்
மலைக்குறத்திதன்னாலே மாதைமறந்தார்கள்
கட்டுவெச்சிதன்னாலே கைகலசந்தார்கள்
தங்களுதேவிகளைத் தான்மறந்தார் அப்போது
ஒருவர்பெருமையைப்பார்கள் மறுபோலமுய்யார்கள்
உணவுமொழி உற்றவிலங்குஞ்சுதார்

வீணைவுதமொழி பித்திலக்கும்பூமுடியார்
இண்டிமறந்து தெருத்திண்ணை பேர்யபடுத்தார்
குறத்திகுறத்தியென்று கொற்றவர்கள்தாமிருப்பார்
மலைக்குறத்திவந்தாளென்று மன்னரெழுந்திருப்பார்
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்பார்
குறத்திகுறத்தியென்று குலைகுவாரமன்னரெல்லாம்
இப்படியாகயிருக்குமந்தவேளையிலே.

(திரியோதிரன்வீதிவருகிறது)

மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகட்டுவச்சி
வேலைப்பழித்தவிழியாள் நடக்கலுற்றாள்
தேசத்தையாளுமந்த திரியோதிரன்வீதியிலும்
நாலாலங்காரர் நாற்பெருக்குவர்வீதிவந்தாள்
வாராக்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
உரிகையர்வாங்கலியோ உத்தமியாள்பெண்டுகாள்
சவரிமயிர்கொள்ளலியோ தார்வேந்தர்பெண்டுகாள்
மாப்பிள்ளைக்கேற்ற மருந்துண்டுகொள்வீரோ
புருஷருக்கேற்ற பொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
(அப்போ) திரியோதிரன்வீதியிலே சிலமன்னர்தான்பார்த்து
காமக்குறத்தியவளைக் கண்டுமெலாவி
இவளார்காண்கட்டுவச்சி இவ்வீதிவந்தவள்தான்
கட்டுவச்சிப்பேரழகைக் கண்டீர்களோமன்னர்களே
இக்காட்டுக்குறத்தியல்ல இவ்வீதிவந்தவள்தான்
மேல்நாட்டுதனில்வாழும் குறத்தியைப்போல்காணுகுது
கெந்தர்வதேவர்களோ காமனுடையத்திலியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்பரனார்தன்னிடத்தில் இருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்கு பார்த்துகுறிசொல்லவளோ
மகாவிஷ்ணுதன்னுடைய மனதுகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தன்மனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
ஐயன்பிரமதேவனுக்கு ஆனகுறத்தியளோ
சரஸ்வதிநாயகிக்கு சனகுறிசொல்பவளோ
மயிலேறும்தேவனுக்கு மனதுகுறிசொல்பவளோ
தெய்வயானைவள்ளியர்க்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு இருகண்கள்போதாது
பூக்கத்தைதாக்குதற்கும் புறங்காலின்வடிவழகும்

பூஞ்சிலம்புதண்டைகளும் புலம்பும்நடையழகும்
முத்துச்சிப்பிதன்னிறம்போல் முழங்கா லிரண்டழகும்
ஈனுதவாழை யிளவாழைத்தண்டதுபோல்
இளவாழைத்தண்டதுபோல் யிருதுடையிரண்டழகும்
ஆலிலைபோலே அமைந்தவயிறழகும்
குரும்பிநுழையாத கும்பத்தனத்தழகும்
கோர்த்தமுத்திலேதளர்ந்த கொங்கையிரண்டழகும்
முருக்கம்பூவிதழதுபோல் உதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லும் முகத்தழகும்ஒப்பனையும்
வட்டமுகமும் மகராசிதன்னிறமும்
வண்ணத்திருத்தோளும கோத்தபணியழகும்
அவனிபதினாலு லோகந்திரிந்துவந்தோம
இவளழகுக்கொப்பானார் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்சொல்லி இவளைவந்துசூழ்ந்தார்கள்
குறத்தியனுமில்வந்து கொற்றவர்களேதுசொல்வார்
வாடிகுறத்தியெங்கள் வர்ண்ணமணிமாளிகைக்கு
கால்பிடிப்போம்கைபிடிப்போம் கனத்தபணிசெய்திடுவோம்
வேண்டியுனைத்தொழுது வேணபணிசெய்திருப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள அடப்பங்கட்டிநின்றிடுவோம்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் வேணதொழில்செய்திடுவோம்
ஆராங்காய்நீராடி அம்மானைதானாடி
பந்தாடிச்செண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் மாங்காகவீற்றிருப்பாய்
உந்தன்பேராசைகொண்டு வுழன்றுதிரிகின்றோமே
பூக்குறத்திஉன்னாலே பெண்டுபிள்ளைதான்மறந்தோம்
அருமைக்குறத்தியுன்னாலே அண்ணன்தம்பிமாமறந்தோம்
உன்னாசைகொண்டேமெல்லோ சன்னாசியானோமே
தாயைமறந்தோமடி சகலரையுந்தான்மறந்தோம்
வாடிக்குறத்தியென்று மையல்கொண்டார்மன்னரெல்லாம்
அப்போதுகுறத்தியவள் அருங்கிளிபோல்வாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்

குறம்,

வாடியென்றும்போடியென்றும் வழிமறித்தாளென்னை

வம்புதும்புஞ்சொல்லவாதீர் மன்னர்களேபோம்போம்

நாற்பெருவர்வீதியிலே வேற்றுமைதானுண்டோ

நாட்பமறியாமலென்னை சொற்பமென்றுமதித்தி
களியாணஞ்செய்யலியோ காளைகளேயுமக்கு
கன்னியின்மேல்குறத்தியின் மேன்மையல்கொண்டீர்நீங்கள்
ஒழியாநகரகமெல்லாம் மறைநூலில்சொல்லும்
அண்ணன்றம்பிதேவியர்மே லாசைக்கொள்வாரானல்
ஆகாதநரகத்தனில் அதிக்கிவோர்மாந்தர்
குருவினையத்தினியும் ஆசைகொண்டாலல்லோ
கொள்ளாதநரகமதில் கூடியதிக்கிவோர்
இப்படியாயுலகுதனில் அழிந்தவர்கள்கோடி
இருமூடங்கொண்டாரோ விடைந்துநடப்பீர்கள்
என்றுசொல்லிபூங்குறத்தி மிகநோக்கிநடந்து
குடைகுலுங்கநடைகுலுங்க நடைநடந்தாள்குறத்தி

வேறு.

குறத்தியவள்போனபின்பு கொற்றம்போர்மன்னவர்கள்
வாடிமனந்தளர்ந்து வண்ணமுகமேவெளுபட்டு
வார்த்தைகுளறியல்லோ மறுவேடமானார்கள்
மூக்காடுபோட்டு மூடிமன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளைதான்மறந்து பூமியின்மேல்தான்படுத்தார்
காமமயக்கம பெரிதாச்சுமன்னவற்கு
குறத்திமயக்கம் வெரிதாச்சுகொற்றவற்கு
கன்னிமயக்கமல்லோ தலைவெடிக்கப்போகாது
அன்னமுந்தண்ணீர் அருந்தார்கள மன்னர்கள்
ஒருவருடன்பேசாமல் உத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
மாலைகுறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
வாராளேபூங்குறத்தி மாதர்கள்வீதியிலே
பாடிவருகிறாள் பத்தினியாள்வீதியிலே
குறம்பாடிவாராளே கொம்பனைமார்வீதியிலே
மைபோர்த்துகொள்ளலியோ பச்சைபோட்டுக்குத்தலியோ
குறிபொன்றும்கேட்கலியோ கொம்பனைமார்பெண்டுகளே
கூடாதபெண்களுக்குகூட்டிவைக்கமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டுகொள்வீர்
உத்தங்விலக்கவென்றால் மெத்தமருந்துமுண்டு
சண்டைவெல்லப்பதற்கு சார்ந்தகுளிகையுண்டு
எதிரிமயக்கவல்லோ என்னைகமருந்துமுண்டு
கனைந்தகல்கூடாதலைது சுருக்கமருந்துமுண்டு

சார்ந்தஸ்தனம்பிடிச தருக்கமாநுறுமுண்டு
எவறுமவள்யாடி இளங்குறத்தியாளே
மான்கரமானுகின்ற மகராசன்தேவிகளும்
பேண்டமயிலகன்றாள் பெருந்திருவாள்மாளிகையில்
நாற்றெருகுவர்பெண்களும் பேற்றமைகளில்லாமல
சொக்கட்டான்குது சதுரங்கமாடி
அம்மானைபந்து அழகுகழலாடி
ஆரங்காய்தானுடி ஆலிதுக்சென்டாடி
பந்தாடிசெண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் ஊஞ்சலுமாடித்தான்
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிமார்வீற்றிருக்கார்
கொம்பனைமார்களெல்லாம் கூடிவிளையாடினார்கள்
தோசகத்திமார்களெல்லாம் ஒருமித்தாடிக்கிருந்தார்
இப்படியாக விருக்கின்றவேளையிலே
வீதியில்பாடியல்லோ வருங்குறத்திசேதிசொல்வோம்
பெருந்திருவாள்வீதிப் படிவாசல்காத்திருக்கும்
வாசற்படிகாக்கும் மயிலனைமார்தாதியர்கள்
குறத்திவருமழகைப் பார்த்திருந்தகொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தி யுறவாடியேதுசொல்வார்
கண்டீரோ அக்கமாரே கட்டிவச்சிமொழகை
பார்த்திரோ தங்கைமாரே பூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகும் சதுராநகைகளிச்சும்
ஓய்ந்தநடையழகும் உருட்டிவிட்டபார்வைகளும்
கோர்த்தக்கழுத்தழகும் கொண்டைபின்னூலழகும்
தருந்தசவுளிகளும் தாள்பூட்டுச்சங்கிலியும்
முன்னை முதாரிகளும் மோதிரம்பொன்னுருட்டுகளும்
தங்கப்பதக்கமும் தகதகெனமின்னிவர
மார்பில்சரப்பளியும் தோளில்புரண்டாட
அங்குமணிகடைக்கள் ஆபரணஞ்சகதிமின்ன
பச்சைமணியழகும் பலகாறைத்தாவடமும்
இந்தக்குறத்தியைப் பிணையழகுகொண்டீரோ
இந்நாட்டாளல்லவிவள் இத்திசையும்அல்லவென்றார்
தென்னாட்டும்குழவல்லோ இவ்விருந்தவள்காண்
தெய்வக்குறத்தியிவள் தெளிவாறிக்கட்டுவைச்சி
வினைக்குறியுரைப்பாள் விலைமையுள்ளபூங்குறத்தி
ஆச்சியாண்மனைக்கு அழைத்துமெள்ளச்சென்றுமே
கட்டமுகிமாதரெல்லாம் கைகாட்டிகுறிகேழ்ப்பார்
என்றுசிலமாதியர்கள் எழுந்திருந்துள்நுழைந்து

ஆரண்மனை ஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
செம்பொன்திரைநீக்கி சேரவந்துமிதண்டனிட்டு
அம்பொன்திரைநீக்கி அழகானதெண்டனிட்டு
தெண்டனிட்டுத்தாதியரும சேரஎழுந்திருந்து
மோதிரமின்னவல்லோ முடிமேலேகைதொழுதார்
பேடைமயிற்கண்ணாளும் பெருந்திருவாள்தான்பார்த்து
(நீ) யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
எவர்பெண்கள்தாதி எனக்கறியக்கூறுமென்றாள்
தாதியவள்கேட்டு தையலர்க்குரைதுசொல்வாள்
ஆர்பணியமல்லவன்காண் அடியேனானும்பணிநான்
பெரியோருடைய பெருமாளேவும்பணிநான்
மானகரமாளுகிற மகாராசர்சொற்படிக்கே
உங்களதுவீதிபடி காக்கிறதாதியென்றாள்
பேரால்மிகுத்ததொரு பெருந்திருவாளதைக்கேட்டு
நீயிங்கேவந்ததொரு காரணத்தைச்சொல்லுமென்றாள்
ஏதுக்காய்வந்தாய்நீ எனக்கறியக்கூறுமென்றாள்
தையலுரைகேட்டு தாதிவருமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணுமதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராதிசயங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தையாளுகின்ற ஸ்ரீபொதிராஜன்
அவர்க்குமொருஞானண்டு எனக்குமொருமூவாண்டு
வாளெடுத்துக்கைகொடுத்து வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலாய் வுன்வாசல்காத்திருந்தேன்
அன்றுமுதலின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
மண்டலத்துப்பெண்களெல்லாம் வாசாதியர்களில்லே
சீமையிலுள்ளபெண்கள் சேனைபெண்கள்வந்திருப்பார்
பட்டமாராசாளும் பத்தினிமார்வந்திருப்பார்
அந்தரத்துப்பெண்கள் அனேகம்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழுகின்ற மென்பேர்கள்வந்திருப்பார்
பிச்சைக்குவந்தவர்கள் பேர்சொல்லமாளாது
இரக்கவென்றுவந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு
குறிசொல்லவந்தவர்கள் கோடானகோடியுண்டு
இப்படிக்கொற்றதொரு குறத்தியைநான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்

பார்க்கக்கிடையாத பத்தினியாள்கட்டுவச்சி
இதுபுதுமைகண்டுமெல்லோ சொல்லவந்தேனுந்தனண்ணை
அழைக்கத்திருவுளமோ ஆச்சியென்றதெண்டனிட்டாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஓரகத்திமார்கள்முகம் உற்றுமவள்பார்த்து
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்யேதுசொல்வாள்
மாதுகுறத்தியரை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானால் தங்கையர்கள்சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அனைவோரும்சம்மதித்து
தாதிமுகம்நோக்கி தையலர்கள்யேதுசொல்வார்
கன்னிகுறத்தியரைக் கடுக அழையுமென்றார்
மாதுகுறத்தியரை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியவள்
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய் பதறிவழிநடந்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாள்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியதுமேதுசொல்வாள்
குறத்தியெதிரில்வந்து கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
நாலால்கடுத்திரளார் நூற்றொருவர்தேவிகட்கும்
பார்த்துக்குறியுரைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
கண்டுகுறியுரைத்தால் கனகமணிதான்கொடுப்பார்
வருகுறையோகட்டுவச்சி மாளிகைக்குளென்றழைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிசிலம்புபாடகமும் அசையவழிநடந்தாள்
தண்டைசிலம்பசைய தானடந்தாள்கட்டுவச்சி
ஆடையொதுக்கியவள் அசைந்துவழிநடந்தாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்மாளிவந்தாள்
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
நாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்க குறுஞ்சிமனைபோடுமென்றாள்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமனைபோடுமென்றாள்
அந்தவுரைகேட்டார்கள் ஏருனதாதியர்கள்

ஏலக்கருங்குழல்மார் இட்டார்கள்நூர் தடுக்கு
கோலவண்ணக்கட்டுவச்சி குந்துங்காணென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கால்மடித்துபூங்குறத்திகைக்கூடைமுன்னேவைத்து
ஒருகால்மடித்துமவள் ஒருகால்பிறகணைந்து
பிரப்பங்கோல்கைப்பிடித்து பெருந்திருவாட்கேதுசொல்வாள

குறம்,

நன்மையுண்டுயுன்மனைக்கு நான்வருகலாலே
நாடாளும்ராசருக்கும் பத்தினியேகேளும்
தலைக்குபராபரவுளியின்று சொன்னதினாலம்மே
தனக்குவரும்செல்வங்களில் சொல்லமுடியாது
மார்தனக்குநேராக மனைக்கேவுளிசொன்னால்
மலைராமர் அருளாலே சந்தோஷமுண்டாம
பெண்களாலுவற்கு யிடதுபக்கநாடித்தால்
பூமியரசாள்வதற்கு பிள்ளைபெறுவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையர்க்குத்துடித்தால்
மாறுமல்வேரிகேள் விளைந்துமல்லோவளம்மே
ஆணும்பிறந்தவற்கு வலதுபக்கம்துடித்தால்
அன்றுஎட்டாநாளையிலே அரசனிலையாள்வார்
கனத்தவொருயிடதுபக்கம் காளைகட்குத்துடித்தால்
காசினியில்வாழாமல் கைலாசம்சேர்வார்
இப்படியாயுலகுதனில் சொல்லுவார்பெரியோர்
எனையழைத்தகாரியங்கள் உரையுமென்றாள்குறத்தி

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கி கொடியனையாளேதுசொல்வாள்
எந்தநாளுங்களுக்கு யிருப்பிடத்தைச்சொல்லுமென்றாள்
வாய்திறந்துகட்டுவச்சி மயிலினையாளதுசொல்வாள்

குறம்,

எந்தன்துநாடுதனை கேழ்க்கவந்தாயம்மே
இருப்பிடத்தைச் சொல்லுகிறேன் விருப்பமுடன்கேளும்
ஆதியென்மலைசல ஈநாதருளாலே

ஐங்கரனார் தன்னருளால் அம்மையுமையருளால்
இந்நாடுகளெல்லாந் தெரிந்து அம்மே
இந்திரனுஞ் சூரியனும் இருக்குமெங்கள் நாடு
சூரியனார் சந்திரனும் சூழ்ந்திருக்கும் நாடு
சுத்தமுள்ள பெரியோர்கள் தவம்புரியும் நாடு
அந்தணர்கள் வேதியரும் அழகான முனிவர்
அனைவோருஞ் சதாகாலம் தவம்புரியும் நாடு
மந்திரங்கள் சாஸ்திரங்கள் மறைவோதும் நாடு
மறவாமல் மூவரையும் துதிக்குமெங்கள் நாடு
சதுர்முகனார் தங்களுக்கு குருபீடமம்மே
காளியம்மையாருடைய தலம் எங்கள் நாடு
ஆயரவரெங்கண்ட வடமதுரைத்தலைமையன்
கைநெட்டிய துவாரகைநாதன் எந்தன் நாடு
இந்திரனார் எந்தன் அபிமானல்லவம்மே
அப்போதும் செம்பகிரி நாங்கள் அரசாள்வோம்
மேகவர்ணனுக்கு இருப்பமம்மே
மெய்யான அவர் பதியை நாங்கள் அரசாள்வோம்
நாகராசன் எந்தன் தகப்பன் மாமன்குலமும்
நாகலோகமெல்லாம் நாங்கள் அரசாள்வோம்
அந்தனூரா ராண்ட பூமியடைமுழுதும்
அடங்கலும் நாம் அரசாள்வோம் ஒருவரிருண்டோ
செங்கமதுரைச் சொக்கலிங்கம் எங்களப்பனம்மே
தேவருடமணிபுரத்தை நாங்களரசாள்வோம்
ஈரேழுபதினாலு லோகமெல்லாங்களை
எப்போதும் அரசாள்வோம் இணையொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைகளிலம்மே
தளராது ஒருநாளும் பஞ்சங்களுமில்லை
அட்சயபாத்திரம்போ லன்னமளிப்போம்
ஆதிகயிலாசசிவ சங்கரனாருள்ளம்
மந்திரத்திறமானவரைமதிப்போமடிநாங்கள்
மாமுனிவர் தன்னருளால் மாயவனார் செயலால்
தந்திரத்திறமேயாய் விருதுவிழாச்செய்வோம்
தென்னிலங்கைக்குரியர் தன்னருளாலம்மே
பச்சைமலைக்குடியிருந்து பழங்கள் மிகப்புசிப்போம்
பகைமானூலே பட்டணத்திலிருப்போம்
கொச்சிமலைக்குடியிருந்து கோவைப்பழம்பறித்து
குளிர்காலமானாலே குறியுரைக்கவருவோம்
அருமைப்பனிமலைக்குடியாள் மொழியுமடியம்மே
ஆண்மைபராபரனுடனிருக்கு மருக்குக்கொளுவிதோ
பச்சைமணிபவளமணி பிச்சையுமிட்டாயெனக்கு
பண்டுமுறையுஞ்சொன்னதெல்லாம் மெய்யென்றுகொள்வீர்
இனிமேற்குறத்தியைப்போல் இச்சைசொல்லமாட்டேன்

எங்கொருமூமைபவட்கு கைபார்க்குங்குறத்தி
உண்மையுள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்று
வண்மையுள்ளஎந்தனிட மனையிடத்திற்சேர்வேன்
ஏழொருநாளாச்சுதடி தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லியற்கு இசைந்தகுறிசொன்னேன்
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து
அலமேலுமங்கையற்கு ஆனகுறிசொன்னேன்
பத்தொருநாளாச்சுதடி அத்திபுரம்வந்து
பாவையரேயுந்தனுக்கு கைபார்ப்பேன்நீவா
கைகுழந்தையவியாலே கதறுதடியம்மே
கடுகெனவேமனைபுகுந்து அன்னமளியிடுவாய்
அரிசியளவுமவெற்றிலையும் அள்ளியிடுவாயே
அதற்கேற்றபிரமனுடை பத்திரியுந்தாராய்

வேறு.

அந்தவுரைகேட்டு அந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்தாள்
இன்றுகுறைஎந்தனது எழுந்திருந்துமுன்னேவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென்று அருங்கிளியாள்தெண்டனிட்டாள்
என்னபணிசொல்லுமென்றுயிளங்கொடியாள்தெண்டனிட்டாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்ஏதுசொல்வாள்
ஆனக்குறத்தியற்கு அன்னம்படையுமென்றாள்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
ஆக்குமடப்பளியை ஆச்சிட்டுத்தான்திறந்து
முறத்தில்இலைபோட்டு முத்துப்போல்சாதமிட்டு
சுற்றிக்கறிகளைவைத்து புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துபருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்தாள்
கட்டிவச்சிமுன்னேவந்து கருங்குழலாள்சொல்லுகிறாள்
மாலைகுறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிமாயகிக்கு கைக்குச்சலந்தான்கொடுத்து
(உன்) பாலகனுக்கன்னம் படையுமென்றாள்தாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆனமுகிலதுசெபதாள்
அன்னமதுவாங்கி ஆரணங்குகட்டுவச்சி
மைந்தனுக்குஅன்னமிட்டு வளர்நாடிவந்திருக்க
குழந்தைக்குஅன்னமிட்டுக் கொமமனையுங்கையலம்பி
கூடையொருபுத்தமைவைத்து குந்தினாள்பூங்குறத்தி

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேது சொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூறுவாள் ராசகன்னி
(நீ)யிருக்கின்றநாடும் எழிலானதேசமும்
மயிலனையேயுன்னுடைய மைந்தர்பெருமைகளும்
மைந்தர்பெருமையும் மற்றபயேர்சந்ததியும்
ஒன்றுமொளியாமல் உத்தமியேகூறுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குவதுசொல்வாள்

குறம்.

தென்காசிமலைநாடு யிருக்குமந்தநாடு
தேசமடிகைலங்கிரி யிருக்குமெங்கள்நாடு
கல்லடைந்தமலைநாடு காடுமந்தநாடு
கைலங்கிரிநாதரங்கே காட்சிதரும்நாடு
சொல்லரியமலைநாடு சுகம்பெருகுநாடு
சோணாசலயீசரடி தேசமடிநாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து யிருக்குமெந்தநாடு
எழிலானமலைநாட்டில் குறத்தியடிநாங்கள்
குத்திமெத்தக்குளித்தாடும் குஞ்சரவநாட்டில்
கூசாமல்வாழுமந்த தேசமடிநாங்கள்
வறக்கமுக்குச்சென்றல்களும் மூளைக்குமந்தநாடு
வாழருணகிரிநாடு தேசமடிநாங்கள்
முத்துமலைரத்னமலை எங்கள்நாடு
மூவர்தமிழ்பாடுமலை எங்கள்நாடு
நீலமலைவிமலமலை எங்கள்நாடு
நித்தம்நித்தம்குறம்பாடி திரிவமடிநாங்கள்
பச்சைமலைபவளமலை எங்கள்நாடு
பரமசிவன்காளியுடன் வாதாடும்நாடு
கொச்சிமலைகுடகுமலை எங்கள்நாடு
குமரேசர்வள்ளியரை கைபிடித்தநாடு
குறச்சிநல்லகுச்சிபிக்கி தனதனவொய்யாரி
குமரேசர்வசந்தராய்க் குறியுரைக்கும்குறத்தி
வெள்ளெருக்கம்பூச்சூடி மிகுந்த அண்ணாமலையில்
வேணவரமகொடுப்பதற்கும் குறியுரைக்கும்குறத்தி
உருக்கியபொன்கொடுத்தாலும என்றாயிலைஎன்போம்
உண்ணாமலையம்மனுக்கு வுகந்த முத்துவகட்டிபோம
வெள்ளிமலைரத்னமலை எங்கள்நாடு
விக்கினற்கும்வேலவற்கும் குறியுரைக்கும்குறத்தி
கண்டத்திலேகறுப்புடைய கயிலங்கிரிநாதர்
கர்த்தருடையவசேலை குறியுரைக்கவந்தேன்

வேறு.

தேனார்விலாடமம்மா தினமுஞ்சென்னல்விளையும்
கல்லின்மேல்நெல்விளையும் கதிர்வாங்குமேலோங்கும்
கடுக்கலங்காணும்கதிருழக்குநெற்காணும்
வாழைவடக்கினும் வான்கமுகுதெற்கினும்
சோலைகிழக்கினும் தெய்யபலாமேற்கினும்
கோவும்புலியுமொரு குளத்திலேநீர்குடிக்கும்
கீரியசர்ப்பமொரு கிண்ணியிலேபால்குடிக்கும்
எலியும்பூனையுமொரு பஞ்சரத்தில்வாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்து தழைத்திருக்குமெங்கள்நாடு
திங்கள்மும்மாரிபெய்யும் தேசஞ்செழித்திருக்கும்
என்றுமவளுரைத்து விருந்தாளொருபுறமாய்

பெருந்திருவாள்சொல்லுவது வேறு.

அப்போபெருந்திருவாள் அருங்கிளியாளேசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுமகூறலுற்றாள்
எத்தனைதிசைமெல்லா முறைத்தாயேகட்டுவச்சி
(நீ)எந்தவூர்எந்தநேசம எனக்கறியகூறுமென்றாள்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்
உந்தனதுற்றுலமும் உன்பேருஞ்சொல்லுமென்றாள்

குறம்-வேறு.

எங்கள்குலம்ராஜகுலம் குறக்கூட்டமல்ல
எழிலானகுடிசையிலே குடியிருப்போமம்மே
ஐவருக்கும்பெண்டிருந்போம் நாங்களடியம்மே
அபிமானங்குலையாத ஜாதியடிநாங்கள்
பஞ்சவற்குப்பெண்டிருப்போம நாங்களடியம்மே
பசிதாபங்குலையாத ஜாதியடிநாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம் பின்னையொன்றுமறியோம்
பெருநெருப்பைதின்றெழுந்த ஜாதியடிநாங்கள்
மாலையிட்டநான்முதலாய் மனதறிந்ததில்லை
மடிநெருப்பைத்தின்றெழுந்தஜாதியடிநாங்கள்
கூரையிட்டநாள்முதலாய்க் குணமறிந்ததில்லை
கொடிநெருப்பைதின்றெழுந்த சாதியடிநாங்கள்

வேறு.

வேடமணிந்தவள் பெருந்திருவாள்காவகியும்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி ... லைக்கட்டுவச்சி
(ரி)

மாலையிட்டநாள் முதலாய் மனமகிழ்ந்ததில்லையென்றாய்
கூறையிட்டநாள் முதலாய்க்குணமகிழ்ந்ததில்லையென்றாய்
கையில்குழந்தையது வந்தவயணமென்ன
மடியிற்குழந்தைவந்த வாறேதுசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அருங்கிளியாளேதுசொல்வாள்

குறம்.

ஆயனருளானோன் றண்ணனடியம்மே
அரிவையந்தசீதையரும்நாத்தியடியம்மே
உலகளந்தமாயனெங்கள் அண்ணனடியம்மே
உத்தமியாள்சீதையெங்கள் நாத்தியடியம்மே
உலகாளும்ராஜகன்னி எனக்குசக்களத்தி
அலையபெற்ற சொக்கரெங்கள் தகப்பனடியம்மே
மாயவனைமைந்தன்வரம் வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்து மெங்கள்ராமல்லோ மைந்தன்வரந்தருவார்
மாயவரேகுழந்தையாக மடிமீதிலிருப்பார்
பிள்ளையெல்லாதெங்களுக்கு பிள்ளைவரந்தருவார்
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமாள்இவர்தாண்டி
மைந்தனில்லாஎங்களுக்குமைந்தன்வரந்தருவார்
மந்திரத்தாலேந்துபிள்ளை உண்டோடிஎனக்கு
மகதேவர்தந்தபிள்ளை யீசாண்டியம்மே

வேறு.

குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
(இந்த) மாதுவுரைகேட்டுமாமயிலனையாளேதுசொல்வாள்
மைந்தன்பெறும்வகைகள் மயிலனையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெறும்வகைகள்கொம்பனையேசொல்லிவிட்டாய்
எங்கெந்தலோகமெல்லாம் கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம் பகரடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
ஆனால்கேள்சொல்லுகிறேன் அன்னமேவெண்மயிலே
பார்த்துவந்தலோகமெல்லாம் பைங்கொடியே சொல்லுகிறேன்கேள்

குறம்-வேறு.

பூலோகம்புவலோகம் பார்த்துவந்தேனம்மே
புதுமையுள்ள சிவலோகம் பார்த்துவந்தேனம்மே
மேலானதெய்வலோகம் பார்த்துவந்தேனம்மே

மென்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சிராசைசந்த்ரலோகம் பார்த்துவந்தேனம்மே
செகம்புகழுஞ்சூர்யலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகஞ்சிவலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிரமலோகம் கண்டுவந்தேனம்மே
நேரானதராதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிட்சயமாய்குறிசொல்லும் குறத்திபதிநாங்கள்

வேறு.

பேடையயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
பதினாலுலோகமெல்லாம் பார்த்துவந்தேனென்றுசொன்னாய்
அந்தந்தலோகமெல்லாம் அறிந்துவந்தேனென்றுசொன்னாய்
கண்டுவந்தலோகத்திலே கணக்குக்குறிசொன்னதுவும்
நீசொன்னகுறிக்கிசைச்சி உச்சிதங்களதந்ததுவும்
வாங்கிவந்தபூஷணங்கள் மயிலேயேசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவிச்சி அழகாகவேதுசொல்வாள்
ஆனால்கேள்பெண்ணரசே அதிசயங்கள்சொல்லுகிறேன்

குறம்-வேறு;

ஈசுரனார்பெற்றெடுத்த விக்கினராசருக்கு
வயிற்றுக்குமுகம்வேறு ஆகுமென்றுசொன்னேன்
இந்திரனுக்குவானவருக்கும் மகிமைவர்க்குமல்லோ
இசைவாகஅனுசரிக்க குறிகள்செத்துவுண்டு
சூரர்க்குமிராசகத்தி இருக்குமென்றுசொன்னேன்
இலம்பெருபெண்ணினுக்கு வருமையினென்றுசொன்னேன்
என்குறிக்கிவீசுரனார் மெச்சியல்லோஅம்மே
இயலானமுத்துமாலை ஈய்ந்தாரடியம்மே
விக்கினருக்கேவலருக்கும் எந்தனுக்கும்மே
வைடூரியக்குறக்கூடை தந்தாரடியம்மே
இந்திரனுக்கானவரும் மெச்சியல்லோஅம்மே
கல்லிழைக்கக்கணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்குலட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
வீதமாகஎன்னையவர் மெச்சிக்கொண்டுஅழைத்து
பட்சமுடன்எந்தனுக்கு லட்சுமியாள்தானும்
பாதகமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்

குறம்பாடி பெற்றுவந்தாய் கோடாரத்தினங்கள்
உள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தி எச்சனுக்கு புகழ்ந்துகுறிசொன்னாயானால்
எந்தன்-மனதுக்குறைகளெல்லாம் வகையாகச்சொன்னாயானால்
உள்ளக்குறியுரைத்தால் உச்சிதங்கள்தாரனடி.
நல்லகுறியுரைத்தால் ரத்தினங்கள்தாரனடி
கொம்பனையேயெச்சனுக்கு குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடைதானிறைய கொட்டுகிறேன்ரத்தினங்கள்
ஒன்பதாரத்தினங்கள் உத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைடூரியம் மாணிக்கம்தந்திடுவேன்
நீலபதக்கங்களும்நிறைந்தமுத்துசரவடமும்
பச்சைபதக்கங்களும்பருத்தமுத்துசரவடமும்
தாளிபதக்கங்களும் சன்னல்பின்னல்சரவடமும்
அத்தனையும்நான் தருவேன் ஆனகுறிசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானகட்டிவச்சி
மாதுமுகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்
தாளிபதக்கம்வேண்டேன் சன்னல்பின்னல்சரம்வேண்டேன்
பச்சைபதக்கம்வேண்டேன் பருத்தமுத்துசரம்வேண்டேன்
மாணிக்கம்வேண்டேன் மரகதகண்டிநான்வேண்டேன்
உத்தமியேயுன்தயவால் மெத்தவுண்டெங்களுக்கு
பாரளந்தநாதர் பெருமாள்கயவாலே
வெள்ளிமலைமேலே வேணதுண்டெங்களுக்கு
உன்கையிலேதானிருக்கும் கற்பூரசம்பாவும்
செந்நெல்கொடுத்தையானால் சிராகளத்தனுக்கு
அள்ளிக்கொடுத்தையானால் ஆனந்தவாழ்மார்பி
வறுத்துகொறித்திடுவேன் வையகத்தில்வாழ்ந்திடுவேன்
சென்னலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன்
குறக்கூடைநெல்கொடுத்தால் குறியுரைப்பேனுந்தனுக்கு
அந்தவுரைகேட்டு அழகுபெருக்கிருவாள்
மெல்லியாள்சொல்கேட்டு நல்லவிதமாக மகிழ்ந்தாள்
அழகுசம்பாநான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்றாள்
நெல்லளந்துநான்தருவேன் நல்லகுறிசொல்லுமென்றாள்
அப்போதுகட்டிவச்சி அதற்குமேசம்மதித்து
கொம்பனையாள்மாதருக்கு குறிசொல்லப்போனாள்காண்

குறம்;

சாணியதுதானெடுத்து சதுருடனேமெழுகி
சட்டநீடன்பிள்ளையாரை பிடித்துமங்கீசவைத்தார்

மாளாதபஞ்சவரை கொல்லவென்று நினைத்தீர்
ஏழுலகமாண்டதொரு எமபெருமாள் தயவால்
எமபெருமாளருளாலே யவர்களுமே பிழைத்தார்
குளிக்குமக்குலத்தன்னில் கூடவழியைகாட்டி
கூசாமல்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அன்றுமந்தசோர்தனிலே கஞ்சமதைகலந்து
உயிருள்ளபாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அப்போது பீமராஜன் அவர்களுண்ணும்சோற்றை
அனைவருக்கும் ஆகாதென்று தான்வாரிபோசித்தார்
வாரியுண்டசோற்றாலே மதிமயக்கமாகி
மன்னவர்மெய்மறந்து வைகுந்தம்சேர்ந்தார்
அப்பொழுதுகல்வருமே அலங்கிபிரண்டழுது
ஆயனைத்தமையன்மாரை பிகளுங்கித்தொழுதார்
அப்பொழுதுமாயவரும் ஐவர்களைக்க க்க
அத்திபுரம்வந்தாரோடி ஜோசியவடிவாக
விஷகடிபாம்புகடி தீருதற்குபாம்பு
வேணவிதமருந்தெடுத்து கூறிவந்தார்தெருவில்
கூறிவந்தசபதமதை தருமராவறிந்து
கொப்பனவேதம்பிதனை யழைபுமென்றுசொன்னார்
அப்போது தம்பியவன் தானழைத்துவந்தான்
ஏனழைத்தீரென்றுசொல்லி ஜோசியவன்கேட்க
தம்பிதனைஎழுப்புமென்று தர்மர்சொன்னாரப்போ
எழுப்பிவிட்டாலெந்தனுக்கு கொடுப்பதென்னவென்றார்
எந்தனது ஆஸ்திகளை உந்தனுக்குத்தருவேன்
அப்போதுஜோசியவன் மருந்தெடுத்துவுரைத்து
ஆயருடஅருளாலே பிழைக்கவென்றுகொடுத்தான்
வைகுந்தம்போனவுயிர் வந்துவீமர்பிழைக்க
மந்திரங்களதந்திரங்கள் செய்தானையம்மே
அவன்செய்தமந்திரத்தால் பிழைத்தானடிபீமன்
அலண்டுவிழித்திரைபோனவன்போல் பிரண்டெழுந்தான்பீமன்
செத்திருந்தவீமனுமே பிழைத்தெழுந்தானென்று
இதிலேயித்துமானங்கலங்கி திரியோதனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுடன் ஆலோசனைசெய்து
படுக்கின்றபாயதனிலே பாம்புகளைவிட்டு
பதைபதைக்கபாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அதற்குந்தப்பிப்பிழைத்தார்கள் பாண்டவர்களம்மே

ஆயனார்மாயனிட உபாயமடியம்மே
வஞ்சனையால்சூதாடி பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டிவைத்தாரம்மே
பஞ்சவரை வஞ்சனைகள் செய்ததுபோதாமல்
பாஞ்சாலிதுரோபதையை பற்றியிழுத்தார்கள்
ஐவருக்குமுகந்தவொரு அபிஷேகபத்தினி
ஆரணங்குதுரோபதையை சபைதனிலேயிழுத்தார்
பறதியர்தானிழுத்து பாவைதுகிலுரித்து
பண்ணுதபாதகமெல்லாம் பண்ணிவைத்தச்சபையில்
கட்டழகிதுரோபதையாள் கண்கலங்கியப்போ
கர்த்தாவர்மாயவரை கைதொழுதுநின்றாள்
ஆயிரவர்மாப்பலனூர் அதிங்காரிவளர்தாரம
அட்சயமாய்த்துகில்களை ஆபரணமளித்தார்
பத்தினியாள் துரோபதைக்கு மாளாத்துகில்கள்
வளருதென்றுசபைதனிலே மெச்சினின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள்செய்ததுண்டோ அம்மே
இவ்வளவுகொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேங்கேளு
அவனுடையபகைகளை அடக்கலுமேபதித்து
அரண்மனையுமண்டபமும் இடிக்கநாயமுண்டோ
அவனுடையதேவிகளை அம்பலத்திலிறக்கி
அவளைமிகவாய்மழுது சொன்னாடியம்மே
உத்தமியைக்கொண்டுவந்து உங்கள்சபையிறக்கி
உரியாததுகிலுரித்ததுண்டோடிகாரிகைகளே
பதினியைக்கொண்டுவந்து மார்சபையிலிறக்கி
பாதகறியப்பேசினது உன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையிலிறக்கி
மனமறியப்பேசினதுமுண்டடிகாண்கள்
அப்பொழுது துரோபதையாள் தன்மனதிலெண்ணி
அண்டாதசண்டாளன் என்றுபழிகொண்டு
திரியோதிரன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
கோரப்பெருஞ்சபதம் இட்டாளந்தச்சபையில்
மொய்குழலாள் துரோபதையும் மூன்றிரண்டுபேருமே
முடிமன்னர்சபைதனிலே இட்டார்பெருஞ்சபதம்
இட்டபெருஞ்சபதத்தினால் திரியோதிரனைக்கொன்று
தன்மனதில்காவலிட்டு தக்கமையெடுத்தப்பால
பனிரெண்டுவருஷமட்டும் வனவாசமிருந்து
பத்துமூன்றுவருஷம் திரிமறைவாகவிருந்து
பதின்மூன்றுஞ்சென்றவுடன் பதினாலில்வந்து
பாரதத்தைதான்முடித்து பட்டமாளுமென்றுன்

அருகுதும்பைகொன்றைபது அவர்சிரசில்சாத்தி
அழகானசலிவகைகள் கொண்டுமேகேப்பழுத்து
கிழங்குடனேவாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமுர்தம கொண்டுவந்துபடைத்தார்
பச்சரிசிதேங்காயும பயறுடனேபாலும
இச்சையுடன்தான்படைத்து தீபதூபங்கொடுத்தார்
அருகுதும்பைகையிலெடுத்து அவர்சிரசிலசாத்தி
சுத்திவந்துகைதொழுது தெண்டனிட்டுமென்றாள்
சிந்தையிலேஉன்குறைகள் தீர்த்தோந்து அம்மே
இந்தநல்லகணபதியை வகதுபணியென்றாள
உங்கள்குலதெய்வங்களை உகந்துகன்றுயம்பாற்றி
உன்வீட்டுப்பூவாடைக் காரிகளைநினைத்து
சிந்தையிலேதியானம்பண்ணி வந்தமருமம்மே
திரமாகவுந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
எந்தன்குலதெய்வங்களை நினைந்து அம்மே
இகழாமல்உந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
கெங்கைபவானியம்மாள காளிகாதேவி
அங்காளஅம்மன்சத்தி அனைவோருமவாங்கள்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்ற கன்னிகளும்வாருங்கள
கைலாசவாசருமே கச்சாலைநாதர
காஞ்சியில்வாழ்ஏகாம்பர காமாட்சிவாங்கள
அண்ணாமலைநாதருமே உண்ணாமுலைத்தாயும
கொல்லாபுரியாளும்வந்து குறக்கூடையமரும
ஏழுகன்னிகளும் எல்லைபிடாரிகளும
எல்லவருமவந்தயிந்த கூடைதனிலமரும
ஈசருமபார்வதியும் இருவருமாட்டீர்கள
இன்பமுள்ளகுறக்கூடை வந்தமரவேணும
அச்சுதருமலட்சுமியும் ஆனந்தமாக
பக்ஷமுடன்குறக்கூடை தன்னில்வந்து அமரும
பிரமாவுமசரஸ்வதியும் புகழாகநீங்கள்
பெருமையுடன்குறக்கூடை வந்தமரவேணும
தேவேந்திரனிந்திராணி சித்தர்கின்னரரும
தெளிவானகுறக்கூடை தன்னில்வந்து அமரும
வள்ளிதெய்வயானையமை [illegible]
எல்லவருமவந்துகுறக் கூடைதனிலமரும
ஏழுமுனிரிஷிமுனி [illegible]

இவர்களெல்லாமொன்றாக குறக்கூடையமரும்
பச்சைமலைத்தாயாரும் பெரியபாளையத்தாளும்
பாவாடைராயனுமே வந்துமிகவமரும்
முப்பத்துமுக்கோடி தேவர்களுங்கூட
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுமேலன்றாய்
அஷ்டதிக்குப்பாலர்களும் நவக்கிரகங்கள்கூட
அனைவோரும்வந்துமிகக் கூடைதனிலமரும்
அண்டரண்டதெய்வங்களை நினைத்துமக்குறத்தி
அழகுபெருந்திருவாட்கு ஏதுகுறிசொல்வாள்
மூட்டீமுந்திவிநாயகனை தொழுதமடிநாங்கள்
முருகருடபாதமலர் என்றுமறவோம்
சத்திவிநாயகனை தொழுமடிகரங்கள்
சரஸ்வதியை அனுதினமும் சிந்தையில்மறவோம்
ஆதிசிவன்மாயவனாம பிரமாவைத்தொழுவோம்
ஆகாசதேவருடன் இந்திரனைமறவோம

வேறு.

அப்போமலைக்குறத்தி ஆரணங்குயேதுசொல்வாள்
தேவாதிதேவர்களைநினைந்துமே அப்பொழுது
கொல்லாபுரத்தாளை நினைந்துகுறிசொல்லுகிறேன்
குறிசொல்வேன்வாடியம்மாள் என்றாளேபூங்குறத்தி
அப்போபெருந்திருவாள் ஆரணங்குயேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
அப்படிக்கேநல்லதென்று ஆரணங்குவந்தமர்ந்தாள்
குறக்கூடைமுன்பாகக் குந்தினாள்நாயகமும
மலைக்குறத்திகட்டுவெச்சி வகையாகயேதுசொல்வாள்

குறம்,

முறநிரம்பசென்னெல்கொண்டு மூன்றுகப்பகுந்து
உம-மனதிலெண்ணிக்கேட்டதெல்லாம் சொல்லுகிறேன்கேளு
உன்பேருபெருந்திருவாள் உடன்பிறந்தாளசுபத்திரை
உன்கணவன்திரியோதிரன் உள்ளபடிகாணடி
இலக்குமணாக்குப்பூமால கல்யாணமென்றுசொல்லி
ஐவரையுமழைத்துவந்த துண்டொடிதாநீங்கள்
அவர்கள்வரும்வழிதனிலேவாய்க்காலவெட்டி
ஐவரையுங்கொல்லவெண்ணி எண்ணியிருந்தீர்கள்
ஆதியெனறகோபால கிஷ்ணனுடையதயவால்
அதுக்குந்தப்பிட்டமுக்காக்கோவர்களுமப்பம்
பலவர்களைவிட்டுமல்லோ எண்ணையக்காத்தப்பத்து

இத்தனைவஞ்சனைகள் செய்ததுண்டுநீங்கள்
அத்தனையும்பொறுத்துஐவர் போனார்வனவாசம்

வேறு.

நீங்களிக்கஞாயமெல்லாம் செய்ததுண்டோவென்றுரைத்தாள்
அங்கவுரைகேட்டு அழுதுவெருந்திருவாள்
குறத்தியுரைக்கேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டு மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணாதகோலமெல்லாம் பண்ணிவைத்தோமவரையும்
வஞ்சனைகள்செய்ததுண்டு வனவாசம்போனதுண்டு
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
பதின்மூன்றுஞ்சென்றபின்பு பதினாலில்பஞ்சவர்கள்
பாரதம்வென்றுமவர் படையெடுக்கவருவாரோ
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவாரோ
வருவாரோவாராரோ மற்றொன்றுசொல்லடிநீ
என்புருஷன்தானே இவர்நாட்டையாளுவாரோ
பாரதம்வென்று வடைபொதும்வேளையிலே
நாங்கள்கெலிப்பதுவும் நாடுநகராளுவதும்
அவர்கள்கெலிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்றால்
அப்போமலைக்குறத்தி அதிவையருமேதுசொல்வாள்
நற்றிவந்ததெய்வமோதான் உற்றகுறியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதை பார்த்துமிருக்கேனே
கட்டழகர்தன்மனதை கண்டுமிருக்கேனே
சாதகமும்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பிரமனெழுத்திறுதான் பிரளாதொருநாளும்
கர்த்தருடகட்டளைகள் கடவாதொருநாளும்
கொல்லாபுரத்தாளை எண்ணியே இப்பொழுது
ரூதன்னடத்தையெல்லாம் சொல்லுகிறேன்கேளடிநீ

குறம்.

கூடைசளிலமர்ந்திருக்கும் கொல்லாபுரத்தாளே
கொம்பனையாள்கேட்குங்குறி சொல்லவரமருளும்
இவ்வமிவள்கேட்குங்குறி எல்லாநான்சொல்ல
வந்தனுக்குவாக்கருளும் என்றுமிகத்தொழுது
பெருந்திருவாள்முகம்நோக்கிப் பேசுகுறத்தி
பெருமையுள்ளஐவரது சேதிகளைச்சொல்வாள்
தர்மமேசெயமென்று போனார்வனவாசம்

தர்மங்களைநினைப்பவர்க்கு சாட்சியுண்டோசொல்லும்
ஐவர்களும்ஐந்துவரு கொண்டுமேல்லோவம்மே
அஞ்ஞானவிலாடபுறம் சேர்ந்தாரோடியம்மே
இன்னமுந்தன்சணவன்படை சேனைகளைக்கூட்டி
இயலானஉயுத்தியங்கள் நடக்குதடியம்மே
உயுத்தியங்கள்நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தெனவேநானுரைத்தேன் சற்றேநின்றுபாரும்

வேறு.

அய்யோபெருந்திருவாள் அரிவையருமேதுசொல்வாள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்ண்ணமலைக்கட்டுவச்சி வாக்குரைப்பாயெங்களுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டிருப்பாரோ
அத்திபுரபட்டணத்தை யாள்வாரோஎன்புருஷன்
ஒருத்தராயாள்வாரோ வக்கமியேயென்புருஷன்
பங்காளிபஞ்சவர்கள் பாதினுடாள்வாரோ
இன்னம்வருவாரோ எங்கள்தாயாதிகளும்
சாகாமலேபிழைத்துத் தரணிபதியாள்வரோ
செத்துமடியாமல் செகதலத்தையாளுவரோ
சண்டையன்னிகாடுநகர் தாமேசெல்ப்பாரோ
ஊருபடியும்வருவாரோ மன்னராந்தபஞ்சவர்கள்
எனக்குதெரியச்சொல்லுமேந்திழையேகட்டுவச்சி
அய்யோதுமலைகுறத்தி அழகாகவேதுசொல்வாள்

குறம்.

பார்சபைகளில்விரித்த கூந்தலடியம்மே
படுகளத்தில்முடிப்பேனென்று போனாளவனவாசம்
உன்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உயுத்தயத்தில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
ஒன்றொருத்தியலலவோடி தலைவிரித்துநின்றேன்
(இந்த)உலகமெல்லாந்தலைவிரிக்க லச்சுமிதன்றுபோனார்
வஞ்சனைகள்செய்தகொரு மன்னவரையெல்லாம்
இரணக்களத்தில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பத்தினியாள்விரித்தகொரு கூந்தலதுஅம்மே
பார்லோகம்விரிக்குமென்று போனாளவனவாசம்
அருந்ததியாள்விரித்தகொரு கூந்தலல்லோஅம்மே
(நானே) அனைவர்களும்விரிப்பாரென்று போனாள்வனவாசம்
பதினெட்டாம்நாளையிலே படைபொருதும்சண்டை
பார்மன்னர்மார்மேலே முடிப்பாளதலைக்கூந்தல்
நாகக்கணைக்கைபிடித்த நாடாளுமன்னன்
உன்) நாயகன்மார்மேலே நீமுடிப்பாள்தலைக்கூந்தல்

அவனுடைய்வுதிரத்திலே அள்ளித்தலைச்சீவி
அ்ைையனுடமார்பெலும்பை சீப்பாகவகுந்து
பக்ககுடல்பதினறும் பத்தினியாளெடுத்து
(நாளை)படுகளத்தில்வாரிதலை முடிப்பாளோடிகூந்தல்
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தொலைந்ததென்று வருவாள்பாஞ்சாலி
பங்காணிதலைகளெல்லாம் பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப் பாராள்வருவாள்
அன்றேமுடியுமடி ஐவருடசபதம்
அரசாளவந்திடுவா ராரணங்கேகேளும்
இந்தமட்டும்சொன்னகுறி யினிபிசகாதம்மே
ஈஸ்பரனார்ஆணையென்று யிருந்தாள்அந்தக்குறத்தி
கூடைதனில்சென்னலது கொட்டலியே அம்மே
கொம்பனையேஎன்மனைக்கு கொண்டுநாடப்பேன்
எட்டொருநாளாச்சுதடி யித்தெருவேவந்து
என்கணவன்யினைதேடி யிங்கேவருவாண்டி
பத்தொருநாளாச்சுதடி வீட்டைவிட்டுவந்து
பத்தாவும்எனைத்தேடி வருவாரடிபெண்ணே

வேறு

என்றுமவருரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்
குறத்திநீசொன்னதெல்லாம் கொற்றவர்க்கேற்கால்ம்
மாதேநீசொன்னதெல்லாம் மயிலிணைக்கேற்காலம்
எங்களுக்குற்றக் குறியொன்றுசொல்லலியே
மன்னவருக்கற்றகுறி மயிலிணையேசொல்லலியே
பஞ்சவருக்காக வுரைத்திரோபத்தினியே
காடாண்டபஞ்சவாகள் நாடாண்டுவருவரோ
ஐவரும்வந்துமல்லோ அரசாண்டிருப்பாரோ
நாலால்கடுந்திரளார் நூற்றொருவரானவரும்
இருந்தரசையாளுவரோ எனக்குரையும்கட்சிவச்சி
நிட்சயமானகுறி நீயுரையுங்கட்டிவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியாள்ஏதுசொல்வாள்
நான்சொன்னகுறிகளெல்லாம் செவிதனக்குஏறலியோ
பார்வதிக்கும்ஈஸ்வரற்கும் பகுந்துகுறியுரைத்தேன்
வேலவற்கும்வள்ளியற்கும் வேணகுறியுரைத்தேன்
இந்திரற்கும்தேவியற்கும் இசைந்தகுறியுரைத்தேன்
இராமருக்கும்சீதையற்கும் நல்லகுறியுரைத்தேன்

பிர்மாசரஸ்வதிக்கும் வேண்டுங்குறியுரைத்தேன்
அந்தந்ததேவரெல்லாம் அடுத்துமெனைக்கேட்டதில்லை
இன்னுமின்னம்சொல்லுமென்று ஏந்திழையேகேட்கிறாய்நீ
ஆனால்கேள்சொல்லுகிறேன் ஆரணங்குநாயகமே

குறம்

நாகக்கொடிசணைபடைத்த நறுநுதலாய்கேளாய்
(உன்)நாயனாராளுவதை சொல்கிறேன்கேளம்மே
நாலால்கடுந்திரளார் நாற்றெருருவரம்மே
நுட்பமுடன்அரசாண்டு அற்பமதில்வாழ்வார்
பத்துதிங்கள்உண்டடியோ பாரசளமன்னர்
பதினோராந்திங்களிலே படைமுகத்துமாள்வார்
எட்டிாண்டுதிங்கள்மட்டும இருந்தரசையாள்வார்
இனியதெத்திங்களிலே யிறந்திடுவார்முடிகள்
பத்தினியார்சாபத்திலே பாரதப்போர்தன்னில்
பஞ்சவர்கள்கையாலே மாண்டிடுவார்அம்மே
அருங்கிளியாள்சாபத்தினல் அரையர்களும்அம்மே
ஐவருடகையாலே மாண்டிடுவார்சொன்னேன்
படிகளத்தில்மாண்டபின்பு கேளடிபெண்ணே
பஞ்சவர்கள்அரசாள்வார் பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தனை அங்கனவேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பார் ஆரணங்கேகேளும்
என்றுமிந்தகுறத்திசொல்ல இளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாப்போல்முழுதும் ஏங்கியழுதாளே

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்சூர்யகமும்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்
ஆர் கடகக்கையாலே அறைந்துகொண்டுதானழுதாள்
மோதிரக்கையை முகத்திலறைந்துகொண்டாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானழுக
அங்குமொருநாதி அறிவுடையாளோடிவந்து
கொப்புதிருத்திபல்லோ கோர்வைமிகதிருத்தி
வளையலதுதிருத்தி வாளிமிகத்திருத்தி
பூணாரேசகத்தை புழுதிமிகத்திருத்தி
ஆறவிடுமென்று சொல்லி அவளெழுந்துப்போய்நடந்தாள்

கட்டார்கருங்குழலாள் காந்தாரிமுன்னேவந்து
செம்பொன்திரைநீக்கிச் சிக்கெனவேதெண்டனிட்டு
அப்பொன்திரைநீக்கி அழகாகதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகிக்கு கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவும் குறிகள்உரைத்ததுவும்
கானக்குறத்தியங்கே கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும் வையகத்தையாளுவதும்
ஐவரந்தபஞ்சவர்கள் அரசாட்சியாளுவதும்
காஞ்சிநாடாளும் கருணாரிங்கேமாளுவதும்
ஆலால்கடுந்திரளார் னாற்றொருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னி பத்தினியாள்துரோபதையாள்
கொற்றார்குழலியவள் கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையும்சொல்லி வுரைத்தாளந்தகட்டுவச்சி
பேடைமயிற்கண்ணால் பெருந்திருவாள்தான்கேட்டு
ஆனந்தமாரி அழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷ அறிக்கையிட வந்தேனென்றாள்
கட்டார்கருங்குழலிக் காந்தாரித்தான்கேட்டு
குறிவுரைக்கவந்ததொரு கொம்பனையாள்கட்டுவச்சி
குறிசொல்லிபோனாளோ கொம்பனையேசொல்லுமென்றாள்
அங்கேயிருக்காளோ ஆரணங்கேசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறிகளுரைத்து யிருக்கின்றாள்பைங்கொடியும்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்றாள்
குருடனுடதேவி கொம்பனையும்தான்கேட்டு
அவளாங்காரக்கோபமுடன் அங்கேயெழுந்திருந்து
தாதிமுகம்நோக்கித் தையலுமேதுசொல்வாள்
தேசத்தையாளும் துரியோதிரனுக்கு
சொல்லிநீவாடியென்று மெல்லிநடக்கலுற்றாள்
அறிக்கையிட்டுவாருமென்று ஆரணங்குவாராளே
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகைசென்று
மருமகளைத்தான்பார்த்து மகராசியேதுசொல்வாள்
என்காண்மருமகளே யிந்தவிதியுந்தனக்கு
இவளார்காணும்கட்டுவச்சி அடவாயுரைத்தவள் தான்
எங்கிருந்தாளங்கேவந்தாய் இந்தக்குறியுரைக்க

மன்னர்வந்துமங்கையைமாலையிடுவார்கள்
அந்தவுரைதான்கேட்டு வுன்தகப்பனம்மே
அப்படியேநல்லதென்று அவனும்சம்மதித்தான்
பதிங்காதம்பந்தலிட்டு பாவையரை வுனக்கு
பாங்கானகிடாக்கையில் தாலியது தந்தார்

ஆட்டுக்கிடாவுன்கழுத்தில் தாலிகட்டியம்மே
ஆறுசுக்கலாய்வெடித்து அந்தக்கிடாமாள
அதுசமையந்தானறிந்து அந்தகனும்அம்மே
ஆரணங்கைஎந்தனுக்கு அருளுமென்றுகேட்டான்
அதுகேட்டுஉன்தகப்பன் நல்லதென்றுசொல்லி
சதுரானகலியாணம் தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையாண்டுமெல்லோ யாண்டிருக்கும்நாளில்
மங்கையரேவுந்தனுக்கு மைந்தனில்லையென்று
நன்மையுண்டுசெல்வமுண்டு இராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லை என்றிருந்தாயோடி
உன்புருஷனுடன்பிறந்த பாண்டுமகாராஜன்
உண்மையுடனவர்மணந்த பத்தினியாள்குந்தி
குந்தியம்மாள்கர்ப்பதி யானுளென்றுநீயும்
கொள்ளாதவருத்தமுற்றாய் குமரியல்லவம்மே
அடங்காதகோபமுடன் அங்கொருநாளம்மே
ஆற்றங்கரைஸ்தானம்பண்ணி அருங்கிளியாள்வாராள்
மின்னல்மின்னிமழைபொழியும் வேளையது அம்மே
மெல்லியரே நீபோய் பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருந்தரிஷியாரும் அணைந்தாரடி அம்மே
அப்போதேசேர்பமது வுண்டாச்சுதுனக்கு
நூற்றுவொருமாதமது சென்றலவோபிள்ளை
நீபெறுவாயென்றுமேதான் ரிஷிவுனக்குஉரைத்தார்
அந்தவுரைகேட்டு அகமகிழ்ந்துவந்தாய்
அப்போதுன்னோரகத்தி ஐந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளைபெற்றாளென்றுசொல்லிநீயும்
உன்மனதுதாளாமல்வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்று யிருக்குமந்தநாளில்
ஏந்திழையாள்பிள்ளைகளை பார்த்துமல்லோநீயும்
ஆங்காரக்கோபத்துடன் அறைந்துகொண்டுநீயும்
அடிவயற்றிலிடித்துகொண்டு அடித்துகொண்டுஅழுதாய்
தொண்ணூறுதிங்களிலே தோகையரேநீயும்
முன்னேயொருகுளவிதனை யிடித்திடித்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமது கலங்கியல்லோஅம்மே
அழகானவுதிரமெல்லாம் வெளியாச்சுதல்லோ
நூற்றொருகிண்ணிதனிலே நுட்பமுடன்பிடித்து

நெருங்காமல்விரைதனிலே அமுக்கிவைத்தாய்பெண்ணே
நூற்றுவொருவுங்கள்சென்ற பிற்பாடுமைந்தர்
வேற்றுமைகளில்லாமல் வெளியானாரல்லோ
பொய்யோடி என்குறிகள் மெய்யேநீபுகலும்
பெருமையுள்ள அந்தகனார் மனுநீதியாலே
என்றுமந்தயிளங்குறத்தி தானுமங்கேநிற்க
இதுவறிந்துகாந்தாரி எண்ணமிடுவதையும்

வேறு

இப்படியாக யிவர்களிருக்கையிலே
திரியோதிரன்சபைக்கு சென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளும் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாசனத்தருகே சென்றிரங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
சீர்கடகக்கையதனை சிரசின்மேல்தூக்கிநின்றாள்
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதார்
தேசத்தையாளும் திரியோதிரன் தான்பார்த்து
(நீ) யார்பெண்ணே தாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன் திருப்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமாளேவுன்பணிதான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் தாதியென்றாள்
நீ இங்கேவந்த தெனக்கறியக்கூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
அப்போதுதாதியரும் அழகாகவதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் வாசலிலே
கட்டுவச்சிவந்ததுவும் கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்நகராளுவதும் அரசுமன்னர் ஆளுவதும்
பஞ்சவர்கள் ஆளுவதும் பார்மன்னர்மாளுவதும்
பாஞ்சாலன்கன்னிதனை பற்றித்துகிலுரிகுவதும்
அத்தனையும்சொன்னாளே அழகானகட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியும்மாமியுமாய்
நூலார்கடுங்கிளர் நூற்றொருவர்பெண்டுகளும்
(அவர்) அங்கேதலைவிரித்து அழுதுபுலம்புவதும்
அத்தனையும்சொல்லி முடித்தாள் அவள் தாதி
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல் உத்தமனும்வீற்றிருந்தான்

பாட்டனார்வீஷ்மரும் பாராளுந்துரோணரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளகங்கயனும்
காஞ்சிகாட"னும் கருணரும்தானறிந்து
நாலார்கடுந்திரனும் நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியனாக் கட்டுவோமென்றுசொல்லி
கால்விதங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மாளாப்பெருவிலங்கு
பெருவிலங்குபேட்டார்கள் சிறையிலடைக்கவென்று
கன்னியனைத்தான்பிடித்துகழுவிலிடுவோமென்று
அல்லவரும்கூடி அழகாகவாரர்கள்
அரண்பனேயேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதிதெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றார்
கானக்குறத்தியனைக் கண்டுமந்தமன்னரெல்லாம்
(கீ) ஆர்காணும்கட்டுவச்சி அறியவுனையுமென்றார்
எந்தவூர்வுங்களது எவ்விடமோசொல்லுமென்றார்

அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி

மானகரமாள்வதற்கு மாதரவள்ளதுசொல்வாள்

குறம்

எந்தனதுதிருநாடு கேட்கிறையோதம்பி
ஏற்றவிடம்சொல்லுகிறேன் யாவர்களும்கேளீர்
சந்திரர்கள்ஆளுவதும் எந்தனிடநாடு
இந்திரனார்ஆளுவதும் எந்தனதுநாடு
ஈரேழுபதினாலு எங்களதுநாடு
ஈஸ்வரனார்ஆளுவதும் எந்தனதுநாடு
சொக்கரவர்ஆளுவதும் எந்தனதுநாடு
ஈஸ்வரியாள்ஆளுவதும் எந்தனதுநாடு
அண்ணாமலையாளுவதும் எந்தனதுநாடு
உண்ணாமலையாளுவதும் எந்தனதுநாடு
கொலைகளவுயில்லாதார் ஆளுமெந்தநாடு
கோத்திரங்கள்சீர்தழைக்கும் எந்தனதுநாடு
பொய்யுரையார்ஆளுவதும் எந்தனதுநாடு
புண்ணியனார்வாசம்செய்யும் எந்தனதுநாடு
முத்தினையமுத்தளக்கும் எந்தனதுநாடு
முன்னோர்களதவம்புரியும் எந்தனதுநாடு
கூடைதனில்கெம்பளக்கும் எந்தனதுநாடு
கொற்றவர்களாளுவதும் எந்தனதுநாடு

வரன்முறைகள் தவராற்கள்எந்தனதுநாடு
வானவர்கள் ஆளுவதும் எந்தனதுநாடு

வேறு

என்றுமவளுரைத்து நின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லி நாயகிபாள்அங்கிருக்க
தேசத்தையாளும் திரியோதிரன் தான்கேட்டு
ஆனல்கேள்கட்டுவச்சி அடியேனொருவார்த்தை
கூடையில்முத்தளந்து கொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்தினில்முத்தளந்து மோருக்களிப்பேன் என்றாய்
(நீ) என்னகுறவாகி வந்தீர்காண் ஏந்திழையே
ஏதுகுறைவாகி யித்தெருவேயிங்குவந்தாய்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மானுகங்கொண்டவற்கு மங்கையருமேதுசொல்வாள்

குறம்

மழைகளில்லைசென்னலில்லை மண்டலங்கள்தோறும்
மகராஜனவற்கு வருத்தங்களுண்டாகி
சென்னலில்லைத்தூரலில்லை சீமையெங்குஞ்சம்பி
சிறப்பானவிளவுமில்லை தேசங்கள்முழுதும்
அத்திநகர்அரசாள்வோர் அரசர்களுண்டென்றார்
அதுகேட்டுசென்னல்பிச்சை வாங்கவந்தேன்நானும்
கொச்சைக்குறத்தி குறிகளிங்கேசொல்லி
குறம்பாடிசென்னல்பிச்சை வாங்கவந்தேனென்றாள்
சன்னசம்பாசின்னசம்பா சாதிமலேசம்பா
சதுரானகேழ்வரகும் வாங்கிவந்தேனென்றாள்

வேறு

அந்தவுரைகேட்டு அரவக்கொடியோனும்
மாதுமுகநோக்கி மன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகநோக்கி கொற்றவனுமேதுசொல்வான்
மானகரமாளும் மகராஜன்பெண்டுகட்கு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
(என்) ஆச்சியற்குசொன்னகுறி அடியேனுக்குசொல்லுமென்றான்
யாவருக்குஞ்சொன்குறி எனக்குஉரையுமென்றான்
முன்னடந்தகாரியங்கள் மெல்லியரேநீயுரைத்து

இனிமேல்நடக்குதும் வகையெனக்குச்சொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டுஅழகானகட்டுவச்சி
கூறுவாள்கொம்பனையும் கோதுகிளிபோலே
வாய்திறந்துதானுரைப்பாள்மாதுநல்லகட்டுவச்சி

குறம்

நெல்வினையைத்தான்பரப்பி சேர்ந்தகுறியென்பாள்
நீலகண்டனிமலியவா வாக்கருளுமென்பாள்
காஞ்சிநகர்தனில்வாழும் காமாட்சிஎன்பாள்
காலையற்குகுறியுரைக்க வாக்கருளுமென்பாள்
உச்சிதமாய்நெல்லெடுத்துஉண்ணாமுலையென்பாள்
உத்தமனார்குறியுரைக்க வாக்கருளுமென்பாள்
பச்சைவிளக்கைப்பிடித்து பாவையரும் அப்போ
பச்சைமலைதாயாரை வாக்கருளுமென்பாள்
ஆயுவரும்அலமேலு மிங்கனவேதந்து
அரசனுக்குகுறியுரைக்க அருள்புரியுமென்பாள்
விக்கினமோவேலவமோ வேண்டிமிகத்தொழுது
மெய்யானகுறியுரைப்பாள் மெல்லியருமங்கே
தேசமுழுதாளுகின்றதிரிமோதிரமன்னா
சிறப்பானகுறியுரைப்பேன் சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகின்ற அரசாசிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன் அரணருமறிய
முன்னடந்தகாரியங்களொன்றுரைப்பேன்கேளும்
மேன்மையுள்ளராச்சியங்கள் ஆண்டுவருநாளில்
நிந்திலங்குபூமுடியார் நிறைந்திருக்குஞ்சபையில்
நினைத்துக்கொண்டாய்மைந்தனுக்கு கலியாணஞ்செய்ய
மன்னர்களைத்தானழைத்து மருமங்களையுரைத்து
மகாராசர்சம்பந்தங்களை வேண்டுமென்றுநீயும்
பாணந்தான் தன்மகளைக் கொள்ளவென்றுநீயும்
பலந்தரொருசபைதனிலே எண்ணமிட்டாய்நீயும்
அவ்வறிந்துவுன் தகப்பனாரதென்றுசொல்ல
அந்தநேரந்தசகுனியவன் ஆதுமென்றேயுரைத்தான்
உடலத்தையாளுகின்ற மன்னர்களேநீயும்
மன்பதிமிகநோக்கி வந்தீரல்லோ அன்று
அந்தசபைதனிலே அருகில்வந்துயிருந்து
அந்தமாபெண்ணகேட்க அவருஞ்சம்மதித்து
பாலப்பெட்டிரொம்பக்கொட்டுமென்றார்பணத்தை
அப்பனுமதுக்கிசைந்து கொடுத்தாய்வெகுபணத்தை

கெட்டிவந்தபொன்னையெல்லம் கோபாலரெடுத்து
கொப்பனவேபதராக்கி தூற்றிவிட்டார்காற்றில்
மறுபடியும்பொன்கொடுத்தால் பெண்கொடுப்பேனென்றார்
மன்னவனேநீமகிழ்ந்து மன்னர்களையனுப்பி
களஞ்சியத்துபொன்னையெல்லாம் கொண்டுவரச்சொல்லி
கரியமாலானவற்கு கணக்குடனேஈய்ந்தாய்
அதுவறிந்துசுந்தரியைத் தாரேனென்றுசொன்னார்
அடவாகமுகூர்த்தமிட்டு அனுப்பிவைத்தார்உன்னை
இன்றெட்டாநாளையிலே முகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள்தானுரைக்க ஏகிவந்தாய்நீயும்
அம்பலத்துசபையிலுள்ளயாவர்களுநீயும்
அன்பத்தாறுதேசத்து மன்னர்களும்வந்தார்
இலக்குணற்குமணக்கோலம்நன்றாகச்செய்து
நாடாளும்ராஜர்களும் நலமுடனேகூடி
மூன்றுநாளாகையிலே முடிமன்னரெல்லாம்
முத்துமுடிராஜாக்கள் பயணமிட்டுவந்தீர்
ஆயனுடபதிநோக்கி அனைவர்களும்வந்து
அரிராமர்தன்கொலுவி லிருக்குமந்தவேளை
அர்ச்சுனன்றீன்றெடுத்த அபிமன்னன்தானும்
அவனுடையதோழர்களும் அங்ஙனவேவந்து
மணவளையில்வீற்றிருந்த இலக்குணனையிழுத்து
மன்னர்சபைமுன்பாக மயிர்பிடித்துச்சிரைத்தார்
ஐந்துநல்லகுடுமிவிட்டு அவன்றலையைச்சிரைத்து
அரசாணிக்காலுடனே இலக்குணனைக்கட்டி
மாயவனைப்பிடித்திழுத்து மரத்தோடேகட்டி
மன்னவனேயுங்களைத்தான் மண்டைகள்நொறுங்கடித்து
மாயன்மகள்சுந்தரிக்கு மணமாலைசூட்டி
மறுபடியும்தன்பதிக்குமன்னன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்பு அரசர்களேநீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்து அபிமானங்குலைந்து
வாளபிமன்செய்ததினால் மானபங்கமாகி
மரியாதைத்தாழ்வாகி மண்டலத்தேவந்தீர்
பொய்யோதான்என்குறிகள் மெய்யோநீபுகலும
பூமிமுழுதாளுகின்ற புண்ணியனேஎன்றாள்
முன்னடந்தகாரியங்கள் இன்னமுண்டுசொன்னால்
முடியாதுபொழுதுமில்லை மன்னவரேநீரும்

முன்னடக்குங்காரியங்கள் எடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுவுலகளித்த ஈஸ்பரனார் அறிய
பஞ்சவரைக்கொண்டுவந்துபாரசபைநிறுத்தி
பங்கப்படுத்தியல்லோ பார்விலக்கைபோட்டீர்
ஐவர்களைசூதாடி அறைதனிலேயடைத்து
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலத்தில்நிறுத்தி
ஐவருடதேவிதனை அம்பலத்தில்நிறுத்தி
அனைவோருந்தாமறிய ஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதறிய பாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியை சாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதறிய மன்னர்சபைதனிலே
மாயவரைச்சீதையனை சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனமறிய போர்மன்னன்சபையில்
பிர்மாவைசரஸ்வதியை சாட்சிவைத்தாளங்கே
மேல்புருவங்கண்ணும் விரிந்ததலையுடனே
மீளாதசாபமிட்டுப் போனாள்வனவாசம்
மன்னவுன்பூமுடியை மண்ணில்வுழத்தரித்து
மயிர்முடிப்பேன்என்றுசொல்லிபோனாள்வனவாசம்
கொற்றவனேவுன்னுடைய குடல்தனையெடுத்து
கொண்டையதுமுடிப்பேனென்று போனாள்வனவாசம்
மன்னவனேயுன்னுதிரம் எண்ணெயென்றுதடவி
மயிர்க்கூந்தல்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பனிரண்டுமோராண்டு சென்றவுடன்மன்னர்
பாரதப்போர்முடிக்கையிலே பஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியில் அர்ச்சுனன்தேரேறி
அரசுமன்னர்பூமுடியை அடங்கலுமேதரித்து
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
கொடிப்பொழுதிலுன்முடியை தரையில்விழவடித்து
பீமனதுதெண்டாலே நீமடிந்தபிறகு
வுபரீதப்பாரதப்போர் முடிந்ததென்றுசொன்னார்
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தகன்னி
பகைமுடிந்ததென்றுசொல்லி மார்மேலேறி
பதிகளைவர்முழுமையுந்தான பாஞ்சாலியறிந்து
பாவையாருந்தன்கூந்தல் வாரிமுடிப்பாளே
கூந்தல்முடித்தாளபின்பு கொற்றவர்களைவர்
பட்டாபிஷேகஞ்செய்து குவலயத்தையாள்வார்

கருணனுடமைந்தனவன் காளை விஸ்வகேது
கனத்தநல்லமுடிசூட்டி அத்திபுரமாள்வான்
அங்கவளநாடனைத்தும் அவனாளப்போரான்
அவனியெல்லாம்பஞ்சவர்க ளாண்டுமிருப்பார்கள்
மன்னரிந்தபட்டணத்தையரசாளப்போரார்
மாளுதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
ஐவரந்தபஞ்சவர்கள் அரசாண்டுவாழ்வார்
அழியாதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
என்றுமிந்தக்கட்டுவச்சி எடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதிரியோதிரன் ஏங்கிமுகம்வாடி

வேறு

குறத்தியுரைகேட்டு கொற்றவனும்வேறுபட்டு
கட்டுவச்சித்தானுரைக்க காளையதுகேட்டு
(அவன்) சிந்தைமனமகிழ்ந்து திடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவாய் மன்னவனும்கோபமதாய்
கானக்குறத்தியல்ல கட்டுவச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிடப் பாஞ்சாலிஎன்றறிந்து
ஐவரையுமாலையிட்ட அருங்கிளியாளென்றறிந்து
அங்குள்ளசேவகரை ஆணழகன்தானழைத்து
தூதுவரைத்தனழைத்து தொழுவிலங்குபோடுமென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத் தொழுவிலேபோடுமென்றான்
ஆரணங்குகுறத்தியரை அடையுங்கிடங்கிலென்றான்
அப்போதுதூதுவர்கள் அங்கனவேயேதுசெய்தார்
கட்டழகிமதினுக்கு கழட்டாவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையும் அரையிலேதள்ளிவந்து
சேர்விலங்குபூட்டியல்லோ சிறையிலடையுமென்று
மாளாவிலங்குமிட்டு மங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகயிவள் இங்கேயிருக்கையிலே
தோராவடிவழகி துரோபதையுமேதுசெய்தாள்
மாயவரைத்தானினைந்து மங்கைபுலம்புகிறாள்
கோவிந்தாவைகுந்தா கோபாலாவாருமென்றாள்
அம்பலத்துவாசலிலே அன்றுவந்துகாத்தீரே
அப்போதுகாத்ததுபோல் இப்போதுகாருமையா
மன்னர்சபைநடுவே மானமதுகாத்தீரே

மானகங்கொண்டவன்றன் மனையில்வந்துகாருமையா
ஆரணங்குளந்தனையும் ஐவரிடஞ்சேருமையா
பாஞ்சாலிஎந்தனையும் பஞ்சவரிடஞ்சேருமையா
ஆனையைகார்த்ததுபோல் அடியாளைக்காருமையா
மைந்தனைக்காத்ததுபோல் ஆரணங்குகாருமையா
என்றுபுலம்பி யிருக்கின்றாள்துரோபதையும்
அந்தசமையம் அதுவறிந்துஎம்பெருமாள்
மாயன்பெருமாள் மனதில்நினைவாகி
தேசத்தையாளுந் திரியோதிரன்மாளிகையில்
மானகங்கொண்ட மகராஜன்வாசலிலே
ஐவருடதேவி ஆரணங்குதுரோபதையாள்
குறமாதனைப்போல கொம்பனையாள்வேஷங்கொண்டு
கட்டுவச்சிபோலாக கன்னிவடிவெடுத்து
சகதேவராஜனைத் தகுந்தக்குழந்தையாக்கி
மைத்துனனானவனை மைந்தருறுவாக்கி
ஐவருடதேவி அபிஷேகபத்தினியாள்
குறத்திவடிவாகி கொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக் கன்னியவ்ளேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
கைபார்த்துக்கட்டுவச்சிக் கனத்தக்குறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள் முழுதும்வுரைத்ததுவும்
இனிநடக்குங்காரியங்கள் யாவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
அழுதுபுலம்புவதும் அத்தையற்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுது மாமியற்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்து மாளிகைக்குவந்ததுவும்
குறத்தியவள்வாய்மொழியைக் கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலினையாள்தன்வார்த்தை மாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லி அனுப்பினதுமங்ஙனவே
மானகன்கொண்ட மகனுக்குரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்த ராஜனறிந்ததுவும்
குறத்தியருகில்வந்து குறியுரைக்கச்சொன்னதுவும்
இடும்பந்திநீயெனக்கு இசைநதகுறிசொன்னதுவும்
பாவிதிரியனுக்கும் பாவைகுறம்சொன்னதுவும்
கேட்டுயிடிவிழுந்து கீர்த்தியில்லாமன்னவனும்
அரும்பாவிசண்டாளன் ஆலோசனைகள்செய்து

பஞ்சவர்கள்தேவியென்று பாவியறிந்துகொண்டு
ஐவருடதேவியென்று அரும்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியற்கு பாரவிலங்கிட்டதுவும்
அருங்கிளியாள்துரோபதையை அறையிலடைத்ததுவும்
அத்தனையும்தாமறிந்து ஆயமொழுந்திருந்து
கைமோசம்வந்ததென்று கரியமால்தானெழுந்து
துவாரகைவிட்டுமல்லோ சுவாமியங்கேவாராரே
வேர்க்கவிரிவிரிக்க விலாடபுரத்தில்வந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
எவருமறியாமல் இனியொருவர்காணாமல்
இருவருக்கும்பின்பிறந்த இளவிஜயன்முன்னேவந்து
அருச்சுனனார்முன்னேவந்து ஆயருமேயேதுசொல்வார்
வாள்விஜயன்முன்னேவந்து பலராமரேதுசொல்வார்
அருச்சுனராஜாவே அனர்த்தம்வந்துநேர்ந்ததுகாண்
வாள்விஜயாமன்னவனே மதிமோசம்வந்ததுகாண்
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பாவிசிறைவைத்தான்காண்
கொற்குழலியாளை கொடிசிறையில்வைத்தான்காண்
கால்விலங்குகைவிலங்கு இட்டும்சிறையில்வைத்தார்
காவலுள்ளதுரோபதையைக் கடுகவழைக்கவேணும்
மயிலிணையாள்துரோபதையை மாளிகைக்கழைக்கவேண்டும்
(நீர்) கொற்றவனார்வீரியரோ குறவனைப்போல்வாருமென்றார்
அப்போதுவாள்விஜயன் அரிராமர்தன்தயவால்
கொற்றவனார்வீரியரும் குறவேஷமானாரே
அணிபிள்ளைகிரிக்கும் ஆண்மைக்குறவனானார்
கரடிபுலிகள்குத்தும் கன்னக்குறவனானார்
தட்டிவரிந்துகட்டி சல்லடமும்மேற்பூண்டு
வில்லப்புகைபிடித்து வேந்தன்முதுகணிந்து
கருவேப்பிலையெடுத்துக் கடுகெனவேதோளிலிட்டு
சுருண்டங்காவற்றலது சுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்கிளாக்காயும் கடுகனவேகைபிடித்து
குறவனைப்போலாக வாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல் வாரானேகாளையவன்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனங்கான்தாண்டி
அத்திபுரஞ்சேர்ந்தான் ஆணழகுமன்னன்
இராஜமன்னர்வீதியிலே நடந்துவாரான்வாள்விசயன்

சிங்கிபைக்காணுமல் தேர்விசயன்தேடிவாரான்

குறத்திதனைக்காணுமல் குறவனவன்தேடிவாரான்

அத்திபுரம்வீதியிலே ஆணழகன்யேதுசொல்வான்

சுருண்டக்காய்கொள்வீரோ சுக்கன்காய்கோள்வீரோ

காட்டுக்கிளாக்காய் கன்னிபரோவேண்டுமோதான்

கிலுகிலுப்பைக்கொள்வீரோ கன்றுதுமபுகொள்வாருண்டோ

கொற்றவர்கள்வீதியிலே குறத்தியுனைக்கண்டதுண்டோ

மன்னர்கள்வீதியிலே மங்கையளைக்கண்டதுண்டோ

மைந்தனையும்மாதருமாய் மாவிவிட்டுவந்தார்கள்

எட்டுநாளச்சுதையா இளங்குறத்திவீடுவிட்டு

பத்தொருநாளச்சுதையா பாவைநல்லாள்வீடுவிட்டு

கைலாயம்குறியுரைத்து கடுகெனவேவீடுவந்தாள்

பிர்மலோகம்குறியுரைத்து பெண்ணழகிவீடுவந்தாள்

வைகுந்தம்போயிருந்து வடிவழகிவீடுவந்தாள்

எமலோகம்போயிருந்து இளங்கொடியாள்வீடுவந்தாள்

நாகலோகம்போயிருந்து நாயகியாள்வீடுவந்தாள்

அன்பத்தாறுதேசமும் அவளறியாநாடுமில்லை
(அவள்) எங்கெங்கேசென்ருலும் இளங்கொடியாள்வந்திடுவாள்
எட்டொருநாள்ஆச்சுதல்லோ என்னணையாள்வீடுவிட்டு
பத்தொருநாளச்சுதல்லோ பத்தினியாள்வீடுவந்து
ஏச்சுக்குஏச்சல்லோ என்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினிமார் வுதாசினங்கள்சொல்லிடுவார்
மாமிமார்தானறிந்தால் மட்டுமருங்குவையார்
மாசில்லாவம்மிசத்தில் மருவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னுலே அழும்புவரநாளாச்சு
அழகுள்ளகன்னியென்று அடைக்கிவசங்கொண்டார்கள்
வடிவுள்ளகன்னியென்று வையசத்தார்கொண்டுசென்ருர்
மாயப்பொடிமருந்தை மயிலிணைக்குப்போட்டார்கள்
சொக்குப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்களோ
மந்திரத்தால்தந்திரத்தால் மாதையழைத்தார்களோ
ஆண்மைவலுமையினுல் அடக்கிவசம்கொண்டாகளோ
என்றுசொல்லியிக்குறவன் இங்கேயழுதுவாரான்
நாலஞ்சுகந்திரளார் நாற்சேருருவர்வீதியெல்லாம்
கன்னிபனைத்தேடியல்லோ காணையழுதுவாரான்

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன் கத்திப்புலம்புகிறான்
குறத்தியைக்காணாமல் கூவியழுகிறானே
வாடிப்புலம்புவதும் மட்டுமிதங்களில்லை
சொல்லிப்புலம்புவதும் செவிகேட்கமுடியவில்லை
அங்கிருக்குந்தாதியர்க ளணியிழைமாரோடிவந்து
ஆர்காணும்நீகுறவா அழுதுபுலம்புவதேன்
எவர்காணும்நீகுறவா யிங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதை ஆரணங்குசொல்லுமென்றாள்
புலம்பும்வகையேது புண்ணியனேசொல்லுமென்றாள்
அப்போதுகுறவனவன் அழுகாகளைதுசொல்வான்

குறம்

கன்னியெங்கள்கட்டுவச்சி கானேகுறமுரைக்க
கண்டுவந்துவீதிகளில் குறமுரைக்கவந்தாள்
மாலையிட்டநாளமுதலாய் எனைப்பிரிந்ததில்லை
மாதுநல்லாள்வீடுவந்து வாரமொன்றுமாச்சே
கூரையிட்டநாள்முதலாய்க் கொற்றவனைப்பிரியாள்
கொம்பனையாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
எட்டொருநாளாச்சுதம்மா என்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான் எங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மா பாவைமனைவந்து
(என்) பத்தினியாளிருக்குமிடம் பாவியுநானறியேன்
கன்னியவைக்கண்டாலே கடுகனவேயழைத்து
கலிராமர்தன்னருளால் கடிகிமனைபோவேன்
உத்தமியேகண்டாலே வுடனேநானழைத்து
உம்பர்பிரான்தன்னருளால் வீடுபோய்சேர்வேன்
கன்னியவைத்தேடுவது கலிராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவது பரமசிவனறிந்தால்
பழிபாவம்நேர்ந்திடுமே எங்கள்குலந்தனக்கு
மெல்லியவைத்தேடுவது வள்ளிவேலரறிந்தால்
வெகுமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
கொம்பனையாள்வீடுவர வில்லையென்றேயுரைத்த
குடிப்பழுதுவந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
எச்சானசாதியெல்லா எங்கள்குறச்சாதி
ஏழானசாதியற்கும் கீழ்ச்சாதிநாங்கள்
காக்காய்தின்போம்கழுகுதின்போம் காட்டோணான்சுடுவோம்
கன்னியவைவிலைக்குவிற்று அமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம் மாயக்குறச்சாதி

மனையாட்டி தன்னைவிற்று அமுதுபொசியோமே
ஏனம்தின்போம்மிருகம்தின்போம் எங்கள்குலச்சாதி
எந்திழையைசோரம்விட்டு அமுதுபொசியோமே
பாரப்புலிமிருகங்குத்திப் பலத்தவிருந்திடுவோம்
பத்தினியைவிலைக்குவிற்று அன்னம்பொசியோமே
எந்தனுடக்குறத்திதனை யாரழைத்தாரோடா
இழுத்தவனைக்கண்டாலே யிருதுண்டாய்ப்பிளப்பேன்
கன்னிதனைத்தொட்டிழுத்த காளைதனைக்கண்டால்
கண்டதுண்டமாய்தறித்து கனத்தவுயிர்வதைப்பேன்
அரண்மனையும்ஆஸ்தனம் அடங்கலும்நானிடித்து
அவனுடதேவிகளை அழைத்திடுவேன்பெண்டாய்
கோபுரமும்கோயில்களும் கொத்தளமுமிடித்து
கொற்றவனுர்தேவிகளைக் கூடியணைந்திடுவேன்
கண்டேனேயாமாகில் கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரை அழைத்துக்கொண்டு கடுகிமனைபோவேன்

வேறு

என்றுமவனுரைக்க இளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிகைநடுங்கி கடுகெனவேவோடிவந்து
மானகரமாளும் மகராஜன்தேவியற்கு
தெண்டனிட்டுத்தாதியர்கள் சீக்கிரமாய்வதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்து மாதருக்குவதுசொல்வார்
ஆச்சிகேளும் அடியேன்ஒருவார்த்தை
மயிலிணையேவுன்னுடைய வாசற்படிகாத்திருந்தேன்
தேனின்குழலாளே தெருவாசல்காத்திருந்தேன்
அங்கேயொருகுறவன் அழுதுபுலம்பிவந்தான்
கட்டுவச்சிதன்னைத்தேடி கன்னக்குறவன்வந்தான்
ஆரணங்கைக்காணமல் அழுதுபுலம்பிவந்தான்
மயிலிணையைக்காணமல் மன்னன்புலம்பிவந்தான்
அழுதகுரல்கேட்டு ஆணழகாவென்னவென்றேம்
மன்னஅழுதவகை வாய்திறந்துசொல்லுமென்றேம்
அந்தக்குறவன் தானுரைத்த வார்த்தையைக்கேளுமென்ருர்
மலைக்குறவன் தானுரைத்த வார்த்தையைக்கேளுமென்ருர்
கட்டுவச்சிநாயகியை கைதொட்டுயிழுத்தவரை
குறத்தியைத்தானிழுத்து குகையிலடைத்தவரை
கண்டேனேயாமானல் கண்டதுண்டஞ்செய்வேனென்ருன்
பார்த்தேனேயாமானல் பழுதுவருமென்றுரைத்தான்
அத்திபுரத்தையெல்லாம் அடியோடிடிப்பேனென்ருன்
மகராஜன்பட்டணத்தை மண்ணோடேசாய்ப்பேனென்ருன்
ஆமணக்கும்பருத்திவிரை அங்கேவிதைப்பேனென்ருன்
மதில்கோபுரத்தை தரையோடேசாய்ப்பேனென்ருன்

ஆண்சிறையும்பெண்சிறையும் அவனைப்பிடிப்பேனென்றான்
ஆணாய்ப்பிறந்தவரை அடப்பம்பிடிக்கவைப்பேன்
மன்னர்களானாலும் மண்டைபிளந்திடுவேன்
தேவர்களானாலும் சிதரடிப்பேன்என்றுரைத்தான்
அந்தவுரைகேட்டு ஆச்சியரோசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம் கொம்பனையேகூறவந்தோம்
என்றுமிகவுரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்
மனகரமாளும் மகராசனவர்க்கு
நீங்களுரையுமென்றார் நித்திலங்கும்பூமுடியார்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தெத்துதெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாளிகைகடந்து மன்னவரிடவீதிவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றருகேதெண்டமிட்டாள்
(நீ) யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
நீயிங்கேவந்ததெனக்கறியக்கூறுமென்றான்
தாதியவள்கைதொழுது தானங்கேயேதுசொல்வாள்
கால்விலங்குகைவிலங்கு சுழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலையடைத்தீரோமெல்லியரை
கட்டுவச்சிதன்னைபல்லோ காவலிலேவைத்தீரோ
மலைக்குறத்தியானவளை வன்காவல்வைத்தீரோ
கட்டுவச்சிகாயகனா கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோ பார்மன்னர்வீதிவந்தான்
பூங்குறத்திதன்கணவன் வந்தான்குறவனவன்
கன்னியரைத்தொட்டிழுத்துக் காவலிலேவைத்தவரை
பத்தினியைத்தொட்டிழுத்துப் பாரசிறைவைத்தவரை
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயாமானால் பத்தியிழுப்பேனென்றான்
இந்திரனேயானாலு மினிவிடமாட்டேனென்றான்
சந்திரனேயானாலும் சற்றும்விடேனென்றான்
தேவர்களானாலும் சிதறடிப்பேன்என்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அறிக்கையிடவந்தேனென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
எண்ணாதுவெண்ணியல்லோ ஏங்கிமனந்தளர்ந்து
அருகிருக்குந்தோழனுக்கு ஆனவன்ஏதுசொல்வான்
காஞ்சிநாடாளும் கருணர்பெருமானே
குறத்திதனைத்தேடி வந்தானாம்குறவனவன்
அந்தக்குறவனையும் அடையும்சிறையிலென்றான்
சிப்பந்தமாற்றிச் சிறையிலடையுமென்றான்

கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
விலக்கிட்டுமென்னவனே விடுகிடங்கில்போடுமென்றான்
அந்தவுரைகேட்டு அங்குராயர்எதுசெய்தார்
வீழ்மார்முகம்நோக்கி வேந்தர்எடுத்துரைப்பார்
இனியெட்டுத்திங்களிலே யினியபோருண்டாகி
பாரதப்போர்தனில் படைமன்னர்சேவுகமும்
வாள்விஜையன்சண்டையிலே மன்னவர்கள்சேவுகமும்
அர்ச்சுனன்சண்டையிலே அரசர்கள்வீரியமும்
நகுலனுடசண்டையிலே ராஜாக்கள்சேவுகமும்
வீமனுடசண்டையிலே வில்வேந்தர்ஆண்மைகளும்
சகதேவன்சண்டையிலே சாமர்த்தியமுள்ளவன்காண்
வெளிப்படநாளாச்சு வேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபோர் ஏன்தேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்கும்போரு நடக்கவேதாயிருக்க
இப்போதும்போரு எழுப்பவும்நியாயமுண்டோ
குறவனைத்தான்பிடித்துக் கிடங்கிலடைப்பானேன்
மலைக்குறவன் தனையடித்து வன்சிறையில்வைப்பானேன்
மலையிலேவாசம்பண்ணும் வனக்குறவர்எல்லாரும்
இவனைச்சிறையில்வைத்தால் ஆரசர்முடிகள்போமோ
அத்திபுரமனைத்தும் அடங்கலுமண்ணுமோ
கோசவளநாடும் குழுறிசழும்பிடுமோ
பஞ்சவர்கள்கையாலே மாளுதற்குமுன்பாக
குறவரிடகையாலே கொற்றவர்கள்மாளணுமோ
வனக்குதவர்கையாலே மன்னர்கள்மாளணுமோ
குவலயத்தையாண்டமன்னா குறவனாலேமாளணுமோ
வையகங்களுள்ளளவு மாறுதபோரகி
சூரியருள்ளளவும் தொல்லுலகில்பேராகும்
குறியுரைக்கவந்தொரு குறத்தியவள்தனையும்
தேடியழைக்கவந்த தெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடும்அனுப்பிவிடும் அரசாளுமன்னர்களே
வறுத்தசென்னல்கைகொடுத்து மங்கையனைஅனுப்பிவிடும்
சுட்டசென்னல்கைகொடுத்து தோகையனைப்போகவிடும்
போகவிடுமென்றுசொல்லி பொற்கருணர்தாமுரைத்தார்
அங்குள்ளமன்னர் அரசர்களும்தான்கேட்டு
கருணர்வுரைத்தது காரியந்தான்என்றுசொன்னார்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
அங்கிருக்கும்துரைகள் அரசுமன்னன்தான்கேட்டு
அறையிலடைத்துவைத்த அழகுகுறத்திதனை
கல்லறையில்வுள்ளடைத்த மெல்லியனைவெளியேவிடும்
களைத்தசென்னல்கைகொடுத்து மாதனைப்போகவிடும்
சுட்டசென்னல்கைகொடுத்து தோகையனைப்போகவிடும்
போகவிடும்போகவிடும் பொற்கொடியாளையத்தை

செல்லவிடும்செல்லவிடும் தேனார்கருக்குழலே
என்றவுரைகேட்டு எழுந்திருந்தார் தூதுவரும்
அரண்மனை எழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீசி தெருவும்பலதாண்டி
குறத்தியிருப்பிடைத்தை வந்தார்கள்கொற்றவர்கள்
சட்டிவைத்துசென்னல் வறுத்துமேகைகொடுத்து
கொள்ளும்பயறுமங்கே கூடவறுத்தார்கள்
எள்ளும்பயறுமங்கே எடுத்துவறுத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்து ஆணழகர்வெளிவாரார்
சுத்தியவர்கைபிடித்து தோகைநல்லாள்முன்னேவந்து
இட்டவிலங்கை யிணைவிலங்கைதட்டிவிட்டார்
போட்டவிலங்குதனைப் பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசென்னல்கைகொடுத்து மங்கையரோபோகுமென்றார்
சுட்டசென்னல்கைபிடித்து தோகையரைநடவுமென்றார்
கொடுத்ததொருசென்னல்களை கொட்டினார்கூடைதனில்
வாங்கிநடக்கையிலே மயிலிணையாள்வதுசொன்னாள்

குறம்

இன்னமொருபத்துதிங்கள் சென்றபிறகல்லோ

இவர்கள்முடிபூமியிலே யிறக்கவும்நாளாச்சு
பத்தினியாள்சாபத்தினல் பார்மன்னர்நீங்கள்
பஞ்சவர்கள்கையாலேமாண்டிடுவீரென்றாள்
அருங்கிளியாள்சாபத்தினல் அரசரெல்லாநீங்கள்
ஐவருடகையாலே அனைவர்களுமாள்வீர்
என்றுசொல்லிக்குறத்தியவள் ஏகிவழிநடந்து
இளவிசையன்முன்னேவந்தாள் இளங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன் அருங்கிளியாள்தானும்
ஆவலுடன்குறவர்முன்னே அருங்கிளியாள்சொல்வாள்
அத்திப்புரவீதியிலே அருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதிஅரசர்எல்லாம அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதில்அழிவீரென்று மன்னருக்குவுரைத்து
மற்றுமொருவீதியிலே குறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக் கொம்பனைமார்கேட்டு
செக்கைக்குறத்தியென்று எனையழைத்தார்மனைக்கு
மகராஜன்தேவியராம் மயிலிணையாள்தனக்கு
மங்கையவள்கேட்டுமல்லோ மயிர்விரித்துஅழுதாள்
அத்தையவள்காந்தாரி அருகாகவந்தாள்
அவள்தனக்கும்குறியுரைத்தேன் ஆணழகாகேளும்
மாபாவிகேட்டுமந்த மைந்தனக்குவுரைக்க
மண்ணைநம்திரியோதிரன் வந்துகுறிகேட்டான்
அரசமுதமன்னனுக்கு ஆனகுறிசொன்னேன்

அவன்கேட்டென்னவனும் அடைத்தானேசிறையில்
கால்விலங்குகைவிலங்கு கனக்கவே தான்பூட்டி
காவலிலேவையுமென்றான் கள்ளனைப்போல்என்னை
மன்னன்வைத்தக்காவலிலே மயிலிணையாளிருந்து
தாயவரைக்கைதொழுது மாதுவெளியானேன்

வேறு

குறத்தியுரைத்ததெல்லாங்குறவனவன்கேட்டு
அரசாளுமன்னனுக்கு ஆண்மைகளுண்டானால்
அவனொற்றராசருடன் எதிர்த்துப்போர்செய்யவேண்டும்
ஐவரையும்போலாக வைத்தானோகாவலிலே
ஆரென்றுஎண்ணி யிருந்தானோ ஆணழகன்
கள்ளித்திருடியைப்போல் கட்டவந்தகாரியமேன்
விலங்கிட்டமன்னவனை வெட்டித்தலைதுணிப்பேன்
காவலிலேவைத்தவனை கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவருடகையாலே அடிபோட்டமாளுதற்கு
காலங்களாச்சுதென்று கட்டழகன்போகலுற்றான்
குறவனுங்குறத்தியரும் கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும் கணவனுடனே
அத்திபுரந்தாண்டி அங்கவனகாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரிபமலைதான் தாண்டி
ஆறுசுனைதாண்டி அடர்ந்தவனந்தாண்டி
விலாடநகற்கருகே வந்தாரிருவருமாய்
குறத்தியுருவழித்து கொம்பனையாள்போலேவாராள்
கட்டுவச்சிவேஷமாறி கன்னியருமங்கேவந்து
விலாடத்தரசன் மனைவந்துவாழ்ந்திருந்தாள்
பணிப்பெண்ணைப்போலாகப் பாஞ்சாலியங்கிருந்தாள்
காண்டாபுனமெரித்த காளையருச்சுனனும்
குறவனுருமாறிக் கொற்றவனும்வடிவெடுத்து
பேடியைப்போலே புகுந்தானரண்மனையில்
தர்மனைக்கண்டுமவன் சாஷ்டாங்கதெண்டமிட்டு
பாஞ்சாலன்பெற்றதொரு பத்தினியாள்துரோபதையும்
குறத்திவடிவெடுத்து கொம்பனையாள்சென்றதுவும்
அத்திப்புரத்தார்க்கு ஆனகுறம்சொன்னதுவும்
கபடன்றுரியோதனன் காவலிலேவைத்ததுவும்
ஆயாதுவறிந்து அவர்வந்துரைத்ததுவும்
அத்திப்புரம்போய் அழைத்துவந்துசேர்ந்ததுவும்
அத்தனையுந்தானுரைத்து அர்ச்சுனன்போய்நடந்தான்
ஐவருந்துரோபதையும் அங்கேயிருந்தார்கள்
மன்னவருந்தேவியரும் மகராஜன்பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருந்தார் சுந்தரப்பூமுடியார்

இந்தக்கதைதன்னை எழுதிப்சடித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தைப் பத்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைதன்குறத்தை துரிதமாய்படிப்பவர்கள்
மாயன்பெருமாளின் மகதேவர்கிருபையினால்
நற்பதவித்தானடைவார் நாட்டிலுள்ளமானிடர்கள்
இந்தக்கதைதன்னை யின்பமாயச்சிலிட
வேங்கட்டராமபூபன் வேல்வேந்தனீன்றெடுத்த
நாராயணசாமி நற்பாலன்சொற்படிக்கு
திக்கெட்டுங்கீர்த்திபெற்ற தமிழ்வல்லோன்வேதகிரி
மைந்தனுங்கந்தசாமி மகிழ்பாலனிக்கதையைக்
குற்றங்களில்லாமல் குறையொன்றும்வாராமல்
கீர்த்திவிளங்கத் கிருபையுடனச்சிலீட்டான்
ஆலைபோலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தார்ஈஸ்வரனார்

புகழேந்திப்புலவர்பாடிய

துரோபதைகுறம்-முற்றுப்பெற்றது

—(*)—

தஞ்சை மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.